Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-27 | 12-09-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -207



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

(சி-10149) T.P: 024-222 4247


# வசதிகளை அனுபவித்துக்கொண்டு அரசாங்கத்தைக் கண்டிப்பதா?

## ஜே.வி.பியைச் சாடுகிறார் ரணில்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் அனைத்து வசதிகளையும் அனுபவித்துவரும் ஜே.வி.பி பணம், புகழ், பதவி என்ற பேராசையில் அனைத்தையும் அனுபவித்துக் கொண்டு அரசாங்கத்தையே கண்டிப்பது போன்று நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கையாக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.மு.கட்சியின் அங்கத்தவர்களுடனான சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த ரணில், மக்களைப் பாதுகாக்கும் கட்சி என்று மக்களையே ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி. தற்போது பதவி, புகழ், பணம் என்று அலைவது வெட்டவெளிச்சமாகியுள்ளதாகவும் தெரிவித்தார். பதவி புகழ், பணம் போன்றவற்றிற்காகவே கூட்டணி அமைத்த ஜே.வி.பி, தனது கொள்கைகளை அது குறித்தே நகர்த்திக்கொண்டு, மக்களை ஏமாற்றி, சிங்கள இனத்தை ஏமாற்றிக் காட்டிக் கொடுத்த ஒரு சின்னத் தனமான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புல்லுமலைத் தாக்குதல் குறித்து உடன் தீர்மானத்துக்கு வரமுடியாது

## -கண்காணிப்புக்குழு உதவித்தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு புல்லுமலையில் அண்மையில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி மீதான தாக்குதல் தொடர்பில் உடனடியாக தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளமுடியாது என போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் உதவித் தலைவர் ஹப்ரூக் ஹொக்லென்ட் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னால் இலங்கை இராணுவம் இருப்பதாக குற்றம் சுமத்தி, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எழுதியிருந்த கடிதம் குறித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சக்கரத்தில் காற்றுப்போனமையால் பரந்தனில் கார் விபத்தில் சிக்கியது

## -சிறுமி உட்பட இருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

நேற்று பரந்தன் பகுதியில் ஏற்பட்ட வீதிவிபத்தில் ஆறுவயதுச் சிறுமி உட்பட இருவர் காயமடைந்தனர்.நேற்று மாலை 5.30மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)



# தென்பகுதி ஊடகவியலாளர்கள் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்

(அலுவலக செய்தியாளர்)

தேசிய சமாதானப் பேரவையின் ஒருங்கமைப்பில் தென்பகுதி ஊடகவியலாளர்கள் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கின்றனர்.

தென்பகுதியில் இயங்கி வரும் அனைத்து ஊடகங்களின் 40 ஊடகவியலாளர்கள் இன்று கிளிநொச்சிக்கு வருகை தருகின் றனர். வடபகுதியின் உண்மையான நிலைப்பாடுகளை நேரில் பார்வையிடுவதற்காகவும் அதன் உண்மைத் தன்மைகளைச் சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டும் நோக்குடனும் இவர்களின் விஜயம் அமைந்தி ருக்குமென எதிர்பார்க்கப்படும் இதேவேளை, இன்று மாலை கிளிநொச்சியில் தங்கியிருந்து நாளை அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு முந்திய

# உதவி வழங்கல் குறித்து ஆராய ஜப்பானிய விசேட தூதுவர் வருகிறார்



சமாதான முயற்சிகள் மற்றும் அதற்கு முன்னதான உதவி வழங்கல் என்பவற்றின் அடிப்படையில் இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதர் யசூசி அகாசி அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இவர் இந்த விஜயத்தின் போது அரசாங்க தரப்பையும் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இதேவேளை இலங்கைக்கு யென் திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் முனைப்பை தமது வங்கி மேற்கொண்டுள்ளதாக ஜப்பானின் ஒத்துழைப்பு வங்கி தெரிவித்துள்ளது இலங்கையின் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், ஜப்பானின் நிதியமைச்சர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் ஊர்காவற்துறையில் சுட்டுக்கொலை

ஊர்காவற்துறையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று மாலை ஏழு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மாயவன் சந்திரமோகன் அருள்தாஸ் என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். இவர் முன்னாள் பருத்தித்துறைப்பிரதேச சபையின் தலைவராக செயற்பட்டு வந்தவராவார். இவரை ஈருருளியில் சென்ற இருவரே சுட்டுக்கொன்றதாக தெரிவிக்கப்படுகின்றது இவரது உடல் யாழ் போதனா மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (27,32)

# இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கமுடியாதுள்ளது

## யாழ்.இல்.கே.ஜி.சாக்கிய நாணயக்கார தெரிவிப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசு சார்ந்ததொரு அமைப்பாக இருக்கின்றமையால் அதனால் சுதந்திரமாக செயற் படமுடியாதிருக்கின்றது.இதனைக் கருத்திற்கொண்டே "நாம் மனித உரிமைகளுக்கான சுயாதீன முறைப்பாட்டு நிலையமொன்றை" யாழில் திறந்து வைக்கின்றோம். என கே.ஜி. சாக்கிய நாணயக்கார தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்கான பாதுகாப்புக்குழு முறைப்பாட்டு நிலையம் நேற்றுமாலை 1.30 மணியளவில் இராமநாதன் வீதி, கலட்டிச் சந்திக்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னைநாள் யாழ்.மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசு நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மனித உரிமைகளுக்கான ஆர்வலர் சாந்தடிபத்திரன, சாக்கிய நாணயக்கார ஆகியோர் கலந்து கொண்டனர்.யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

05.03.1991அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். லெப்.அனு (கணபதிப்பிள்ளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொட்டாஞ்சேனையில் இயங்கிவந்த தொலைக்காட்சி நிறுவனங்கள் முற்றுகை

## -கிளிநொச்சிவாசி உட்பட மூவர் கைது

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் நடத்தப்பட்டு வந்த சுமார் மூன்று கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களை பொலிசார் நேற்று மாலை முற்றுகையிட்டு அங்கிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான தொழில்நுட்பக் கருவிகளைக் கைப்பற்றியுள்ளனர்.இந்த நிறுவனங்களை நடத்தி வந்ததாகக் கூறப்படும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் உள்ள இடத்தில் இருந்து செயற்பட்டமையால் இங்கிருந்து துறைமுகம் தொடர்பான தகவல்கள் கிளிநொச்சிக்குக் கடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் நினைவுநாட்களை யாழ்.இல் எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாட்கள் யாழ்.மாவட் டத்தில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக நேற்றுமுன்தினம் மாலை 3.00மணியளவில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலகத்தில் கலந்துரையா டல் ஒன்று மேற்கொள் ளப்பட்டது. இக்கலந்துரையாடலில் பிரதேச போர் எழுச்சிக்குழுவின் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை யாழ்.மாவட்டத்தில் சிறப்பாக அனுஷ்டிக்க தேசிய எழுச்சிப் பேரவையினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக ஏனைய பொதுஅமைப்புக்கள் செயற்படவுள்ளன. தியாகி திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு விளையாட்டு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் முகாமமைக்கவில்லை

## அபிவிருத்தி அலுவலகங்களையே அமைக்கின்றனர்

### பொருண்மிய மதியுரையக அலுவலக திறப்பில் துரைரெட்ணசிங்கம் பா.உ

திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளில் விடுதலைப்புலிகள் முகாம்களை அமைக்கவில்லை. அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதற் கான அலுவலகங்களையே அமைத்து வருகின்றார்கள். இதுதான் உண்மைநிலை என்று திருகோணமலை மாவட்டத் தமிழ்த்தேசியக் கூட்ட



மைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் பொருண்மிய மதியுரையகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தின் திறப்பு நிகழ்வில் பங்குபற்றிப் பேசும் போது தெரிவித்தார். பி. சத்தியசிவராஜா கூட்டத்திற்கு தலைமைவகித்தார். திருகோணமலை மாவட்டத்தில் விடுத லைப்புலிகள் புதிதாக முகாம்களை அமைத்துள்ளார்கள் என்று அரசாங் கம் கூறிவரும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

“யுத்தநிறுத்த உடன்படிக் கையை விடுதலைப்புலிகள் தூய்மையான எண்ணத்துடன் கை.டப்பிடித்து வருகின்றார்கள். இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரவேண்டும் அவர்கள் வாழ்வில் மீண்டும் இயல்பு நிலை ஏற்படவேண்டும்;என்ற தெளிவான நோக்குடன் விடுதலைப்புலிகள் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அதற்காக விடுதலைப்புலிகள் திருமலை மாவட்டத்தின் பல பகுதிகளில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக் கைகளை மேற்கொள்ள வதற்காக அலுவல கங்களை அமைத்து செயற்பட்டு வருகிறார்கள். அவ்வாறாக அமைக்கப்பட்டு இயங்கும் அலுவலகங்களெல்லாம் விடுதலைப்புலிகளின் முகாம்களாக அரசு மற்றும் பேரினவாத சக்தி களின் கண்களுக்குத் தென்படு கின்றன” என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை என்ற விதத் தில் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணுவதைத் தவிர்க்கும் இழுபறி அரசியல் அணுகுமுறையை அரசு கடைப் பிடித்து வருகிறது என்றும் துரை ரெட்ணசிங்கம் தெரிவித்தார். பொருண்மிய மேம்பாட்டுப் பணிப் பாளர் திலக்டெக் பணிப்பாளர் எம் சுந்தரமூர்த்தி, மாகாணசபையின் பிரதிப் பிரதம செயலாளர் வி.எம். சுவாமிநாதன் எஸ்.யேசுதாஸன், சட்டத்தரணி கா.சிவபாலன் மற்றும் பலரும் பேசினர். (25)

### வீடு எரிந்து நாசம்

கடந்த புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புதுக்குடியிருப்பு 2ஆம்வட்டாரத்தில் அமைந்துள்ள சோ.நாகராசா என்பவரது வீடு எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது. இதில் பாடப்புத் தகங்கள்,ஆவணங்கள் உட்பட பெறுமதிமிக்க பொருட்கள் பல நாச மாகியுள்ளதாக குடும்பத் தினர்தெரிவித்துள்ளனர். (08)


### வரிவிளம்பரம்

**காணி விற்பனைக்கு**

திருவையாறு 1 ஆம் பகுதியில் 47 ஆம் இலக்க காணி 3ஏக்கர் 23 பேச்-விற்பதற்கு உண்டு. தொடர்புகொள்க, இராமசாமி புவனேந்திரன், “அஞ்சல் பல்பொருள் வாணிபம்”, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (4914)


# முல்லைத்தீவு மாவட்ட நியாப் மீளாய்வுக் கூட்டம்

2002,2003 காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்திய நியாப் வேலைத்திட்டங்களின் மீளாய்வுக்கூட்டம் கடந்த 09ஆம் திகதி ஒட்டுசுட்டான் நியாப் காரியா லயத்தில் நியாப் பிரதித் திட்டப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இவ்வொன்று கூடலின் போது சமுகமளித்த கிராமிய மட்ட அமைப் புகளிடம் திட்டத்தின் முன்னேற்றமும் பின்னடைவும் கேட்கப்பெற்று முடிவடையாத திட்டங்களை இம் மாத இறுதிக்கு முன் பூர்த்திசெய்யுமாறு பிரதித்திட்டப் பணிப்பாளரினால் வலியுறுத்தப்பெற்றது. அத்தோடு நியாப் 2 திட்ட செயல்முறையும் பணிப்பாளரினால் கூறப்பெற்றது.

இவ்வொன்று கூடலிலே ஒட்டுசுட்டான் பிரதேச செயலரும், நீர்ப் பாசனப் பொறியியலாளரும், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியி யலாளரும், தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைமாவட்ட சமூக உணர் வூட்டல் பகுதி இணைப்பாளரும், முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன, பொறுப்பாளரும் நிர்வாகசபைப் பிரதிநிதியும் மற்றும் அரச ,அரசசார்பற்ற பிரதிநிதிகளும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

மேலும் மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான இதே போன்ற நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வவுனிக்குளம் நீர்பாசனத் திணைக்கள காரியாலயத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# தாழ்வுப்பாடு ப.நோ.கூ.கிளை நேற்று திறந்துவைப்பு

மன்னார் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தாழ்வுப்பாடு புதிய கிளை நேற்றுத் திறந்து வைக்கப் பட்டது.

சங்கத்தின் தலைவர் ஜனாப் அப்துல் சஜானி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தாழ்வுப் பாடு பங்குத்தந்தை அவர்கள் கிளையைத் திறந்துவைத்தார்.

இந் நிகழ்வில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்கள், பணியாளர் கள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.

# கணினிப்பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி மாவட்ட இலங் கைச்செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடத்திவரும் கணினி வகுப்புகளில் பயிற்சிபெற்று சித்தியடைந்த முதல் தொகுதி பயிலுனர்களுக்கு சான் றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணி முதல் மூன்று அமர்வுகளாக நடைபெற வுள்ள இந் நிகழ்வில் 450 பயிலு னர்கள் சான்றிதழ்களைப் பெற வுள்ளனர்.சான்றிதழ் பெறுவதற்கு பதிவுகளை மேற்கொண்ட பயிலு னர்கள் எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி தலைமை அலு வலகத்திற்கு சமூகம் தந்து விழா ஒழுங்குகள் குறித்த விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு, இது குறித்து நேற்று இடம்பெற்ற கலந் துரையாடலில் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

# காலபோக நெற்செய்கை குறித்த கால அட்டவணை கலந்துரையாடல்

(துணுக்காய்)

காலபோக நெற்செய்கை காலஅட்டவணை தொடர்பான கலந்து ரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி பாலிநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு வவுனிக்குளம், பனங்காமம்குளம், கொல்ல விளாங்குளம் ஆகிய குளங்களுக்குக் கீழுள்ள விவசாயிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு பாண்டியன்குளப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (24)

# மன்னார் சாவக்காடு அன்னைவேளாங்கன்னி திருவிழா

(மன்னார்)

மன்னார் சாவக்காட்டு அன்னைவேளாங்கன்னி ஆலயத் தின் வருடாந்தத் திருவிழா நேற்றுக் காலை மிகவும்சிறப்பாக நடை பெற்றது. இந்த விழாவில் 25000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தத்திருவிழா வழிபாடுகள் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர்அருட்தந்தை அ.சேவியர் குரூஸ் தலைமையில் நடை பெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு எஸ்.எமிலியான் பிள்ளை அவர் கள் சகல ஒழுங்குகளையும் செய் திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (மி)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் வீட்டுத்தரிசிப்பு நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் அரசியல் துறைப் போராளிகளினால் வீட்டுத்தரிசிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. பிற்பகல் 3.00 மணிக்கு கியூடெக் குடியிருப்பு ஞானஒளி முன்பள்ளியில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றுள்ளது. அப்பகுதி வலயப்பொறுப்பாளர் பொன்னமுதன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் சமகால அரசியல்தொடர்பாக முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப் பாளர் சின்னண்ணர் அவர்களும், மற்றும் முல்லை மாவட்டஅரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி வேழினியும், மாவட்ட ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் பாரதியும் உரையாற்றினர். இக் கூட்டத்தில் 200 இற்கும் மேற்பபட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். (08)



புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக சுற்றுமதில் அருகே நீண்டநாட்களாக அகற்றப்படாதுள்ள குப்பை. படம் :-தவரட்ணம்

# சதுரங்கப் போட்டி

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு துணுக்காய் வலயத் திற்கு உட்பட்ட ஊழியர்களின் சதுரங்கப் போட்டி அண்மையில் துணுக்காய் வலயக்கல்வித் திணைக்கள கேட்போர் கூடத் தில் இடம்பெற்றது.

சதுரங்க கலையகத்தின் தலைவர் த.ஜீவானந்தம் தலை மையில் இடம்பெற்ற இப் போட்டியில்வலயக்கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன், பிரதிக்கல்விப்பணிப்பாளர் பரந்தாமன், விஜயபாலா போன்றோர் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத் தனர்.போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங் களை ஆசிரியர் தினத்தன்று வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (24)

# கோட்டைகட்டிய குளம்பகுதியில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு கோட்டைகட்டியகுளம், அம்பலப் பெருமாள் பிள்ளையார் கோயில் ஆலயமுன்றலில் கோட்டை கட்டியகுளம் வலயப்பொறுப்பாளர் அகக்கண்ணனின் ஒழுங்கு படுத்தலின் கீழ் நேற்றுமுன்தின பிரிவு இடம்பெற்றது.

ஆரம்பநிகழ்வினைத் தொடர்ந்து உரைகள்,கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில்பல தரப்பட் டோர் கலந்துசிறப்பித்தனர். (24)

### புகைப்பீடிக்கத் தடை விதிக்குக

நாட்டில் உள்ள பொது இடங் களை புகைபிடிக்க தடை விதிக்கப் பட்ட பிரதேசமாக பிரகடனப் படுத்துமாறு பாராளுமன்றத்தில் ஆலோசனை நேற்று சமர்ப்பிக் கப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த யோசனையை சமர்ப்பித் திருக்கின்றார். இந்த ஆலோசனை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பட்டுள்ளது. (32)


## இரு நூல்களின் அறிமுக விழாவும்; புதுவை அன்பனின் இரு நாடகங்களும்

- போராளி ஆதித்த நிலாவின் “எங்கே மனக்கண்களைத்திறவுங்களேன்.” (சிறுகதைத்தொகுப்பு)
- அருமைக்கல்லூரிப் போராளிகளின் “முதற்பயணம்.” (சிறுகதைத்தொகுப்பு)
- புதுவை அன்பன் நெறியாள்கையில் அருமைக்கல்லூரி போராளிகளின் “எம் தேசத்துக்காய் எங்கெங்கும்.” (நாடகம்)
- புதுவை அன்பன் நெறியாள்கையில் விடுதலைப்பறவை கலைஞர்களின் “கரைதேடும் ஓடங்கள்.” (நாடகம்)

- காலம் — 12.09.2004, ஞாயிறு (இன்று)
- நேரம் — 3.30 மணி
- இடம் — பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி.

போராளிகள் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அருமை கல்விக்கூடம் (சி.10219) அறிவமுது பதிப்பகம்

# ஈராக்–ஆப்கானிஸ்தான் போரில் தோல்வியின் விளிம்பில் அமெரிக்கா

## –அல்–ஹைதாவின் இரண்டாவது தலைவர் அய்மன்–அல்–ஜவாஹ்ரி

(கெய்ரோ)

**"ஈராக், ஆப்கானிஸ்தான் போரில் அமெரிக்கா தோல்வியின் விளிம்பில் இருக்கிறது" என்று அல்-ஹைதாவின் 2ஆவது தலைவரான அய்மன் அல்-ஜவாஹ்ரி கூறியிருக்கிறார். நியூயோர்க்கில் 111 மாடி இரட்டைக் கோபுரக் கட்டடத்தின் மீது தீவிரவாதிகள் விமானத்தை மோதச் செய்து அதைத் தகர்த்த 3ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றுக் கடைப்பிடிக் கப்பட்டது.**

இதையொட்டி அல்-ஹைதா இயக்கத் தலைவரான பின்லேட னின் தளபதியும், அந்த இயக்கத் தின் அதிகாரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவருமான அல்-ஜவாஹ்ரி பேசிய ஒளிநாடா ஒன்றை அல்-ஜசீரா தொலைக் காட்சி ஒளிபரப்பியது. அதில் அல்-ஜவாஹ்ரி கூறியிருப்பதாவது,

"நியூயோர்க் மற்றும் வோஷிங் டன் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட 3ஆண்டுகளில் அல்-ஹைதா தலைமையை அமெரிக்கா விரட்டிக்கொண்டு இருந்தாலும் தலைமை உயிர்ப்புடன் தான் இருக் கிறது என்பது நிரூபணமாகியுள் ளது.

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானி லும் நடக்கும் போரில் அமெரிக்கா தோல்வியின் விளிம்பில் உள்ளது. விரைவில் கடவுளின் அருளால் அது தோல்வியைத் தழுவுவது உறுதியாகும். அந்த 2 நாடுகளிலும் போரைத் தொடரமுடியாமலும், விடமுடியாமலும் அது தத்தளிக் கிறது. போரைத் தொடர்ந்தால், அமெரிக்கர்கள் மரணத்தைத் தழுவ வேண்டும். போரைக்கைவிட்டால், எல்லாமே அவர்கள் கையை விட்டுப்போய்விடும்.

அமெரிக்கர்களின் உயிருக்குப் பாதுகாப்பான காலம் என்பது கடந்துவிட்டது. ஈராக், ஆப்கான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிரான குற்றங்க ளில் ஈடுபடுவதை நிறுத்தினால் மட்டுமே அமெரிக்கர்களின் உயிருக குப் பாதுகாப்புக் கிட்டும்.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் புனிதப் போர் நடத்துபவர்களின் திறந்த வெளியாகிவிட்டது. எதிரிகள் (அமெரிக்கர்கள்) தலைநகரில் மட்டும் முடக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கர்கள் பதுங்கு குழிக ளில் ஒளிந்து கொண்டிருக்கிறார் கள். புனிதப்போர் நடத்துபவர்க ளைச் சந்திக்கப் பயந்து கிடக் கிறார்கள். அமெரிக்கர்களின் யுத்தம எல்லாம் வானத்தில் இருந்து குண்டு போட்டு தூசைக் கிளப்புவதுதான். இப்படி வெற்று வெளியில் குண்டைவீசி அமெரிக்கர்கள் பணத்தை வீணடிக்கிறார்கள்.

ஈராக்கில் அமெரிக்க ஆதரவு அரசுக்கு எதிராகப் புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. இந்த எழுச்சி எண்ணை வளமிக்க ஈராக்கைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அமெரிக்காவின் திட்டத்தை முறி யடித்துவிட்டது.

அரபு உலகத்தைச் சிதறடிக்க வேண்டும் என்பதுதான் அமெரிக் காவின் கனவு. இதற்கு ஒரு உதார ணம், சூடானில் ஆபிரிக்க கிராம மக்கள் இனப்படுகொலை செய்யப் படுவதை இஸ்லாமிய அரசு ஆதரிப்பதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது. அமெரிக்காவின் இந்தக்கனவு நடைமுறைக்கு வரப் போவதில்லை. இவ்வாறு அய்மன் அல்-ஜவாஹ்ரி கூறியிருக்கிறார்.



40 வருடங்களுக்கு முன்பு தென்கொரியாவில் கடமையிலிருந்த போது வடகொரியாவுக்கு தப்பியோடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க இராணுவ சார்ஜன்ட்

# அமெரிக்கர்களின் கல்லறைத் தோட்டமாக ஆப்கானிஸ்தான் மாறப்போகிறது

## தலிபான் இராணுவத்தளபதி

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர். விமான நிலையத்தை தாக்கியழிக்கும் நோக்கத்துடன் வீசப்பட்ட ரொக் கெட்டுகள் குறி தவறி மக்கள் குடியிருப்புப் பகுதியில் விழுந்தன. இதில் ஒரு குழந்தை உட்பட 3பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் அடுத்த மாதம் ஒக்ரோபர் 9ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கின்றது. அதைச் சீர்குலைக்கும் முயற்சியாகத்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமை அதிகாரி கூறினார். இந்த ரொக்கெட் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் எந்த இடத் தையும் தாக்கக்கூடிய திறமை தலிபான்களுக்கு இருக்கிறது என்பதை நிரூபித்துள்ளதாக தலிபான் இராணுவத் தளபதி முல்லாதாதுல்லா அக்குந்து கூறினார்.

அமெரிக்கர்களின் கல்லறைத் தோட்டமாக ஆப்கானிஸ்தான் திகழப் போகிறது என்றும் அவர் எச்சரித்தார்.

# அமெரிக்க இரட்டைக் கோபுரம் தகர்ப்பு உயிரிழந்தோர் நினைவாகக் கண்ணீர் அஞ்சலி

(வோசிங்டன்)

அமெரிக்காவிலுள்ள நியூ யோர்க்நகரில் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா அமெரிக்கா உட்பட பல நாடுகளிலும் நேற்று நினைவு கூரப்பட்டது.இத் தாக்கு தலின் போது உயிரிழந்த மூவா யிரம் பேரின் நினைவாக கண்ணீ ரஞ்சலி செலுத்தப்பட்டது. நியூ யோர்க்கில் இன்னுமோர் இடத்தில் நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் அமெரிக்க வெளிவிவகார அமைச் சர் கொலின்பவல், பாதுகாப்பு டொனால்ட் ரம்ஸ்பீல் ஆகியோர் பங்கேற்றனர். இதன்போது அங்கு உரையாற்றிய பவல் தீவிரவாதத் திற்கெதிராக உலக நாடுகள் அமெ ரிக்காவிற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.



இதே வேளை லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக வும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது இந்த வர்த்தக மையம் தாக்கப்பட்டதன் நினைவாக அமைக் கப்படவிருக்கும் கட்டடத்தின் மாதிரி வடிவங்கள் அடங்கிய படங்கள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டன இவை அங்கு பெரும் வரவேற் பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# 82 கோடி ரூபா பெறுமதியான விண்வெளிக் கமராவை இந்தியாவுக்கு வழங்குகின்றது இஸ்ரேல்

(ஜெருசலேம்)

செயற்கைக் கோளை ஏவுவதற்காக 'தாவெக்ஸ்-2' விண்வெளிக் கமராவை இந்தியாவுக்கு வழங்கவுள்ளது இஸ்ரேல். 'ஜி சாட்-4' செயற் கைக்கோள் 2005 ஆம் ஆண்டு இறுதியில் ஏவப்படும்.

இருநாட்டுவிண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக மராவைத் தருகிறது இஸ்ரேல். இந்தக் கமராவின் மதிப்பு ரூ.82 கோடி. ரஷ்யசெயற்கைக்கோள் ஏவும் சாத னத்துக்குத் தக்கவாறு இந்தக் கமரா உருவாக்கப்பட்டிருந்தது, கூடுத லாகச் செலவழிக்கப்பட்டு இந்திய செயற்கைக்கோள் ஏவும் சாதனத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த எலோப் எலக்ட்ரோ ஆப்டிக்ஸ் நிறுவனம் கமரா வைத் தயார் செய்துள்ளது. மூன்று தொலைநோக்கிகள் இதில் உள்ளன.



சிறிநகரில் இந்திய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் ஜம்முகாஷ்மீர் தேசிய முன்னணியினர்.

# அமெரிக்க இராணுவத்தில் பாலியல் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை குழு

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில் கடமையாற்றும் பெண் இராணுவத்தினர் சக ஆண் வீரர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதாகப் புகார்கள் எழும்பியுள்ளன. ஈராக்கிலும், குவைத்திலும், பணியாற்றிய பெண் சிப்பாய்களிடம் ஆண்வீரர்கள் முறைகேடாக நடந்துகொண்டதாக செய்தி கள் வெளியாகின. இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் உத்தரவின் பேரில் பாலியல் தாக்குதல் தடுப்பு நடவடிக்கைக் குழு ஒன்றை இராணுவம் அமைத்துள்ளது. இதன் தலைவராக விமானப் படை பிரிகேடியர் ஜெனரல் கே.மெக்ளெய்ன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு பெண்ணான இவர் இப்போது டெக்சாசில் உள்ள விமானப்படைத் தளத்தில் தொழில்நுட்பப் பயிற்சித் துணைத்தலைவராக இருக்கிறார்.

# அமெரிக்க விமானங்கள் குண்டுவீச்சு ஈராக்கில் குழந்தைகள் உள்பட 29 பேர் பலி

(பலூஜா)

ஈராக்கில் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் 12 பேர் உயிரி ழந்ததுடன், 9 பேர் காயமடைந்த னர்.

ஈராக்கின் மற்றொரு நகரமான தால் ஆ'.பரில் அமெரிக்க விமா னங்கள் குண்டு வீசித் தாக்கியதில் 17 பேர் இறந்தனர். 51 பேர் காய மடைந்தனர்.

பலூஜா நகரில் இறந்தவர் களில் பெரும்பாலானோர் பெண் கள் மற்றும் குழந்தைகள் என நகரின் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் கூறினார்.

குண்டு வீச்சினால் சேதம டைந்த கட்டடங்களின் இடிபாடுக ளில் இருந்து குழந்தைகளின் சட லங்களை மீட்கும் முயற்சியில் நகர மக்கள் ஈடுபட்டுள்ளதாக ஏஎ'.ப்பி செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

அண்மையில் பலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் 7 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட னர். இதைத் தொடர்ந்து அப்பகுதி யில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கி வருகின்றன. அல்-ஹைதா தீவிரவாதிகள் மறைந் திருந்த கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணு வம் தெரிவித்தது. தால் ஆ'.பர் நகருக்கு அருகே தீவிரவாதிகளுக் கும் அமெரிக்க இராணுவத்தின ருக்கும் கடும் மோதல் நடைபெற்று வருகிறது. தெருவெங்கும் பிணங் கள் சிதறிக்கிடக்கும் நிலையில் தொடர்ந்து குண்டுகள் வீசப்படுவ தால் அவற்றை அகற்ற முடிய வில்லை.

'இப்பகுதியில் இருந்து ஈராக்கிய அரசின் படைகளை தீவிர வாதிகள் விரட்டிவிட்டனர்.

மீண்டும் ஈராக்கிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இந்நகரைக் கொண்டுவர அமெரிக்கப் படைகள் நடவடிக்கைகளைத் தொடங்கியுள் ளன' என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறினர்.



தாய்வானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் தமது வீட்டுக்குள் புகுந்த வெள்ள நீரை அகற்றும் சிறுவர்கள்

# மாணவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முல்லை.மாவட்டத்தில் காவல்துறை தீவிர முயற்சி

## கருத்துரைகளுடன் புகைப்படக் கண்காட்சியும் நடைபெறுகின்றன

(புதுக்குடியிருப்பு)

**முல்லை மாவட்டத்தில் தமிழீழ காவல்துறையினரால் போக்குவரத்து நடைமுறைகள் குறித்து மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அந்த வகையில், கருத்துரைகள் மற்றும் கண்காட்சிகள் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.**

வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் சம்பந்தமான கருத்தூட்டலும், புகைப்படக் கண்காட்சியும் கடந்த வியாழனன்று காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் நெடுங் கேணி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நெடுங்கேணி காவல்துறை விசாரணைப் பிரிவுப் பொறுப்பாளர் கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபர் மு. குகதாஷன் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை மணலாறு பிராந்திய கட்டளை உதவிப் பொறுப்பாளர் சுடர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஆசி உரையை கிராம சேவையாளர் தெய் வேந்திரம் நிகழ்த்த,சிறப்புரையை நெடுங்கேணி பிரதேசப் பொறுப்பாளர் ஜெயானந்தம் ஆற்றினார்.

தொடர்ந்து போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டலையும், செயல முறையினையும் - புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் இராச சுசிதனன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முத்துஐயன் கட்டு, கச்சிலைமடு, கூழாமுறிப்பு ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 500இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அப்பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இதில், கருத்துரைகளை அப்பகுதி காவல் பணிமனைப் பொறுப்பாளர் இராசசுசிதனன் நிகழ்த்தினார்.

இதேவேளை, நேற்று முன் தினம் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலத்தில் அப்பகுதி காவல் பணிமனைப் பொறுப்பாளர் தலைமையில் வீதிப் போக்குவரத்து விதி முறைகள் சம்பந்தமான கருத்தூட்டல் நிகழ்வும், புகைப்படக் கண்காட்சியும் இடம் பெற்றது. இந்நிகழ்வில், ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் வி. கே. சிவலிங்கம் ஏற்றி வைக்க, தேசியக் கொடியை காவல் துறை துணை நிர்வாகப் பொறுப்பாளர் வண்ணக்கிளி ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஆசியுரையை முல்லை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. பேரின்பநாயகம் நிகழ்த்தினார். சிறப்புரையை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் ஆற்றினார். தொடர்ந்து போக்குவரத்து விதி முறைகள் தொடர்பான கருத்தினை போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் இ. சிவகுமார், போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் கனகலிங்கம், புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்,கணேசாம.வி., அரசரத்தினம் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம், விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 1200இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அப்பாடசாலையின் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், அன்றைய தினம் 12.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை இரணைப்பாலை மகாவித்தியாலயத்தில் மேற்படி நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. பொதுச் சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடியை முல்லை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து சிறப்புரையை, முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆற்றினார். தொடர்ந்து வீதிப் போக்குவரத்து சம்பந்தமான கருத்தூட்டலை புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் வழங்கினார். இதேவேளை, இந்நிகழ்வில் இரணைப்பாலை அம்பலவன் பொக்கணை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அப்பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (08)

## இளைஞர் கைது

கொள்ளுப்பிட்டியிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரசினுடைய தலைமையகத்தில் உளவு பார்த்தார் எனக் கூறி நேற்று முன்தினம் கிளிநொச்சி வாசி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஆறுமுகம் தொண்டமானைப் பார்க்கப்போவதாகக் கூறிச் சென்றார் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)



நெக்கொட் திட்டத்தின் கீழ் நெடுங்கேணியில் நீர்வழங்கல் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக பிரதான நீர்த்தாங்கி வேலை முடிவுற்று இருப்பதைப் படத்தில் காணலாம். (படம் : வரன்)

# வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்தி தின நிகழ்வு

## கிளி.மகாவித்தியாலயத்தில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரிய மத்திய நிலையங்களும், மாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும் ஆசிரியர் வாண்மை விருத்தி தின நிகழ்வு நேற்று முன் தினம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

காலை 9.30 மணியளவில் கிளி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் கிளி/ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் எனக் கலந்து கொண்டவர்களை பாண்ட்வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் மங்கல விளக்கினை மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வவுனியா எம்.சுகமட்ஹன், பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கிளிநொச்சி த.சத்யமூர்த்தி, தேசியக்கல்வியற் கல்லூரி வவுனியா க.பேனாட், முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகளை சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்த எம். சுகமட்ஹன், த.சத்தியமூர்த்தி, க.பேனாட் ப.தேவேந்திரன், த.இன்பதேவராஜா, கு.முருகுப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் உரையினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நிகழத்தினார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 350 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள், 30 இற்கு மேற்பட்ட சேவைக்கால ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆசிரிய வாண்மை விருத்தி கற்றல், கற்பித்தல் சேவைகள்எனப் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

(தீ.ச)

# வவுனியா மாவட்டத்தில் 38 பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையில் இயங்குகின்றன

## 5 பாடசாலைகள் மூடப்பட்டன

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் இரண்டு கல்வி வலயங்களில் உள்ள 193 பாடசாலைகளில் இராணுவ நடவடிக்கைளின் போது பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்த நிலையில் தொடர்ந்தும் 38 பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

05 பாடசாலைகள் மூடப்பட்டும் உள்ளன.

இதனைவிட வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் தமது சொந்த இடங்களில் 150 பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் கல்வித் திணைக்களத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக 44ஆயிரத்து 203 மாவணர்கள் கல்வி கற்று வருகின்றனர். 1614 ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சராசரியாக 27.3 வீதமான ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




இலங்கை வங்கியின் 65 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி கிளி. மாவட்ட வைத்தியசாலை விடுதிகளுக்கு 65 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய திரைச்சீலைகள் பொருத்துவதற்காக கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் மாவட்ட மருத்துவச் சங்கத் தலைவரிடம் காசோலையினை கையளிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:சோ,கு)

## மகோற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பாமடிப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 17ஆம் திகதி அலங்காரத் திருவிழா நடைபெறவுள்ளது. (12)

## நாளொன்றுக்கு ஏழு பிறப்புக்கள்

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 7குழந்தைகள் பிறப்பதாக சுகாதாரப்பிரிவின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 2003ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் மொத்தமாக 2ஆயிரத்து 702 குழந்தைகள் பிறந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை கடந்த ஆண்டு வவுனியா பொது மருத்துவ மனையில் 3ஆயிரத்து 919 சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2ஆயிரத்து 799 சிறிய சத்திர சிகிச்சைகளும், ஆயிரத்து 120 பெரிய சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## கண்டாவளை ம.வி யில் கணினிப் பிரிவு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலய "கணினிப்பிரிவு" ஆரம்ப விழா நாளை 13ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கணினிப் பிரிவினை ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடசாலைகளுக்கான கணினிப்பிரிவிற்கான உபகரணங்களை அன்பளிப்பாக கண்டாவளைப் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டன், டென்மார்க், சுவிசர்லாந்து ஆகிய நாடுகளில் வசித்து வருபவர்களும் மற்றும் கண்டாவளைப் பிரதேசத்தினைச் சேர்ந்த இருவரும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தால் நல்லூர் ஆலயச் சூழலில் கண்காட்சி



தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தினர் நல்லூர் ஆலயச் சூழலில் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகின்றனர்.

இங்கு அனைத்துலகத் தொடர்பகங்களினால் வெளியிடப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள், நினைவு நாட்காட்டிகள்,பொங்கு தமிழ் நினைவுப் படங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கண் காட்சியினை பெருமளவனோர் தினமும் பார்வையிட்டு வருகின்றனர். இக்கண்காட்சி எதிர் வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (செ)

-படையினரால் கைதாகி காணாமற் போன-

# இளைஞர், யுவதிகள் தொடர்பாக மேலும் ஆட்கொணர்வு மனுக்கள்

(வடமராட்சி)

1996/97ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பாக மேலும் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளது. முன்னதாக படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன 43 பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன எஞ்சிய தமிழ் இளைஞர், யுவதிகள் சார்பில் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்க சில தொண்டமைப்புக்கள் முன்வந்துள்ளன. (27)

## மாவீரர் நினைவாக கலைமன்றம் ஆரம்பம்

இயக்கச்சி சந்தியில் மாவீரர் செங்கோல் நினைவாக கலை மன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான இசைக்கருவிகளை மாவீரர் செங்கோலின் தந்தை எதிர்வரும் 15ஆம் திகதி காலை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

# குடாநாட்டில் நீண்ட காலத்தின் பின்னர் பாலங்களை புனரமைக்க நடவடிக்கை

## படைத்தரப்பு தொடர்ந்தும் முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

**பாலங்களை திருத்தும் பணி யாழ்.குடாநாட்டில் நீண்ட இடை வெளியின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட தீவுப்பகுதிக்கான நுழைவாயிலுள்ள பண்ணைப்பாலம், யாழ் பருத்தித்துறை வீதியிலுள்ள வல்லைப்பாலம் மற்றும் யாழ்-கண்டி வீதியிலுள்ள கைதடிப்பாலம், வண்ணாத்திப்பாலம் என்பவையே மீள நிர்மாணிக்கப்படவுள்ளன.**

மேற்படி பாலங்களை மீள் நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் கடந்த அரசின் ஆட்சிக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், சிறிலங்காப் படைத் தரப்பின் ஒத்துழைப்பு இன்மையால் அம்முயற்சிகள் சாத்தியப் பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதியாகப் பொறுப் பேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனிற்கும் யாழ்.அரச அதிபருக்குமிடையே அண்மையில் இடம்பெற்ற பேச்சுகளையடுத்து இப்பால நிர்மாணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க படைத்தரப்பு முன்வந்துள்ளது.

தற்போது பால நிர்மாணப் பணிகளுக்கு ஏதுவாக அப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றிப் படைத் தரப்பு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. எனினும் அப்பாலப் பகுதிகளில அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ சோதனைச் சாவடிகளை அகற்ற ஒத்துழைப்பதாகப் படைத்தரப்பு அறிவித்திருந்த போதும் இது வரை அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லையென செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் பால நிர்மாணப் பணிகள் இடம்பெறுகின்ற வேளை போக்குவரத்துக்கள் துண்டிக்கப் படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக தற்காலிக பாதைகளை சமாந்தரமாக நிறுவும பணிகள் ஆரம்பமாகியுள்ளது. (27)



*கைதடிப்பாலம் 185 அடி நீளமும், 24 அடி அகலமும் கொண்டதாக கொங்கிறீற்றால் அமைக்கப்படவுள்ளது. இப்பாலமானது 5 மாத காலத்திற்குள் புனரமைக்கப்படவுள்ளது. இப்புனரமைப்பினை யூரோவில் கட்டட நிர்மாண நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இப்பாலம் புனரமைப்புச் செய்வதற்கு ஏதுவாக பாலத்திற்கு அருகாமையில் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக தற்காலிகப்பாதை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றதைப் படத்தில் காணலாம்.* (படம்:- செல்வா)

## காணாமற் போனோர் குறித்த விசாரணை ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோரில் 15 பேரின் ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

சாவகச்சேரி மாவட்ட நீதவான் எஸ்.சுப்பிரமணியத்தால் நடத்தப்பட்ட இவ்விசாரணைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்விசாரணையில் மனுதாரர் சார்பாக மனித உரிமைகள் சட்டத்தரணி எம்.றெமீடியஸ்சும் எதிராளிகளான படைத்தரப்பின் சார்பில் இராணுவ சட்டத்தரணி குறூப்பும் ஆஜராகியிருந்தனர். (33)

## சுயதொழில் மேம்பாட்டுக் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வாழ்ந்துவரும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான சுயதொழில் மேம்பாட்டுக் கடனுதவிகளை வழங்கும் செயற்றிட்டத்தில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்ட அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இக் கடனுதவிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஏராளமானோர் கடனுதவிகளைப் பெற்று தமது சுய தொழில்களை மேம் படுத்தி வருகின்றனர். (33)

## தமிழ் மொழித்திறன் எழுத்தாக்கற் போட்டி

2004ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித்திறன் விருத்தி எழுத்தாக்கப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பின்வரும் மாணவர்கள் தமது சான்றிதழ்களையும், பரிசுகளையும் எதிர் வரும் 19ஆம் திகதி திருகோணமலையில் இடம் பெறவுள்ள தமிழ மொழித்தின விழாவில் நேரில் வருகைதந்து பெற்றுக்கொள்ளுமாறு தமிழ் மொழிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ந. அனந்தராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேரில் வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியாதவர்களின் சான்றிதழ்களும,பரிசுப் பொருட்களும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும் பின்னர் அனுப்பி வைக்கப்படும். இப்போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்கள், தேசிய நிலையில் வவுனியா வலயக்கல்விப் பணிமனையில் நடத்தப்படும் தமிழ்மொழித்திறன் எழுத்தாக்கப் போட்டிகளுக்குத் தயாராக இருக்குமாறும் ந. அனந்தராஜ் உதவிக்கல்விப் பணிப்பாளர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஆக்கம்- எழுத்துபிரிவு-01**

01ஆம் இடம்:- செல்வி த.அபிநயா, யா/ சாவகச்சேரி ஆரம்பப் பாடசாலை, 02ஆம் இடம் செல்வி க.பா.பஸ்லீனா, தி/அல்-பத்தா மு.வித்தியாலயம், 03ஆம் இடம் செல்வி சீ.வினோஜா, மட்/ குமார கபாலியர் கிராமம் வி.

**கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு 02)**

01ஆம் இடம் செல்வி எச்.இஸ்ஸத் சமீஹா, கமு/ ஆயிஷா பெ.ம.வி, 02ஆம் இடம் செல்வி த.கோபிகா கிளி/முருகானந்தா ம.வி. 03ஆம் இடம் செல்வி ஏ.எம். பாத்திமா, முபாஸியா மட்/ ஓட்டமாவடி பாத்திமா ம.ம.வி,

**கட்டுரை- வரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு-03)**

01ஆம் இடம் செல்வி பா.ஜசிந்தா, யா/வேம்படி மகளிர் கல்லூரி, 02ஆம் இடம் செல்வி ந.பவித்திரா கிளி/புனித திரேசா மகாவித்தி. 03ஆம் இடம் செல்வி ர.ஆரணி, தி/சென் மேரிஸ் கல்லூரி.

**கட்டுரை- வரைதல், இலக்கியம் நயத்தல் (பிரிவு-04)**

01ஆம் இடம் செல்வி வா. தர்மிஷா, யா/யூனியன் கல்லூரி, 02ஆம் இடம் செல்வி மு.ச.பாத்திமா சித்தீக்கா, கமு/அல்-மஸ்கர் பெ.உ. பாட, 03ஆம் இடம் செல்வி மு.நி. அ.அ. பாத்திமா பர்ஹத் மட்/ மில்லத் மகளிர் ம.வி.

**தமிழியற் கட்டுரை வரைதல்- இலக்கியம் நயத்தல் (பிரிவு-05)**

01ஆம் இடம் செல்வி த.சசிரேகா, மட்/ மகஜனாக் கல்லூரி, 02ஆம் இடம் செல்வி யு.எல்.றிஷானா, கமு/ அல்-மர்ஜான் மு.மகளிர் கல்லூரி. 3ம் இடம் : செல்வி ந.துகிர்தா, கிளி.கிளிநொச்சி ம.வி

**இலக்கணப் போட்டி (பிரிவு 4)**

1ஆம் இடம்-செல்வி.ஆ.பா.பாத்திமா றிபானா, மட்/மீரா மகளிர் ம.வித்தி, 2ம் இடம்:- செல்வன்.தி.சிறி.ரஜீவன், கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி, 3ஆம் இடம்:-செல்வி.அ.அன்ரனற் நிரோஜினி, மு/முல்லைத்தீவு ம.வி,

**இலக்கணப்போட்டி (பிரிவு 5)**

1ஆம் இடம்: செல்வி.தி.காயத்திரி, யா/மகாஜனாக் கல்லூரி, 2ஆம் இடம் செல்வி.மு.ச.றினோசா, கமு/சம்ஸ் மத்தியகல்லூரி, 3ஆம் இடம் செல்வன்.ஆ.பிரதீபன், மட்கிரான்குளம் விநாயகர் ம.வி.

**திறனாய்வுப்போட்டி (பிரிவு 5)**

1ஆம் இடம் செல்வன் வி.மயூரதாஸ், யா/புற்றலை ம.வி., 2ஆம் இடம் செல்வன். எம்.முசாதிக் கமு/ அட்டாளைச்சேனை மு.மத்.கல், 3ஆம் இடம் செல்வி.எம்.இர்பானா, தி/அந்-நகார் மு.ம.வி.

**குறுநாடக ஆக்கம் (பிரிவு-4)**

1ஆம் இடம் செல்வி.வே.சுபிதா, கிளி/நாகேஸ்வரா வித்தி, 2ஆம் இடம் செல்வி.செள.கபிலா,யாழ்/ கொழும்புத்துறை இந்து.ம.வி. 3ஆம்.இடம் செல்வன்.ய.முகம்மது முபாசிர், கமு/அல்-மதினா ம.வி,

**குறுநாடக ஆக்கம் (பிரிவு-5)**

1ஆம் இடம் செல்வன்கு.அறிவழகன், யா/மல்லாகம் ம.வி., 2ஆம் இடம் செல்வி.ஷ.நூர்ஜகான் தி.அல்-மின்ஹாஜ் மு.வித்தி, 3ஆம் இடம் செல்வன்.கா.கஜிகரன்,வ/புதுக்குளம் ம.வி.

**கவிதையாக்கம் (பிரிவு-4)**

1ஆம் இடம் செல்வி அ.அனுஷானி யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் செல்வன் எஸ்.ஸ்ரனி கிசோகர், மன்/புனித சபேரியார் ஆ.கல், 3ஆம் இடம் செல்வன். த.நிதர்சன், தி.இ.கி.மி. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி,

**கவிதையாக்கம் (பிரிவு -5)**

1ஆம் இடம் செல்வி மு.றசீர் ஜுஸ்லா, மட்.மீரா ம.வி., 2ஆம் இடம் செல்வன். அ.ஜெ.டெனிசியஸ், மு/வித்தியானந்தாக்கல்லூரி, 3ஆம் இடம் தி.சிவரூபன், யா.மட்டுவில் சந்திரபுரம் ம.வி.

**சிறுகதையாக்கம் (பிரிவு-4)**

1ஆம் இடம், செல்வி.மு.கேதுசா, கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி, 2ஆம் இடம், செல்வன் கி.சிவ பிரசாந்த், தி.சி.கோணேசரா இ.கல், 3ஆம் இடம், செல்வி நா.நிருபா, வ/சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்.

**சிறுகதையாக்கம் (பிரிவு- 5)**

1ஆம் இடம் செல்வன். ரா.ப.அருஸ், கிண்ணியா மத்திய கல்லூரி, 2ஆம் இடம் செல்வி. யோ.ரிஷிகா, யா/மானிப்பாய் மகளிர்கல்லூரி, 3ஆம் இடம் செல்வி.க.லோககீதா, வ/சைவப்பிரகாசம் மகளிர் மவி.




*தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதர்சன உருவாக்கப்பிரிவின் வெளியீடுகளின் விற்பனை நிலையம் ஒன்று நல்லூர் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். இங்கு நிதர்சன வெளியீடுகள் விற்பனை செய்யப்படுகின்றது.* (படம்:-செல்வா)

# எப்போது வேண்டுமானாலும் "அரியணை" பறிபோகும்!


ஜெயலலிதா

தமிழகத்தில் ஆளும் கட்சி தற்போது மூச்சு முட்டிய நிலையில் தான் இருக்கின்றது. எங்கே திரும்பினாலும் அ.தி.மு.க அரசு ஏதோ ஒரு பிரச்சினையில் முட்டுப்பட்டபடி தான் இருக்கின்றது. இதனால் தமிழக அரசு எப்போது கலைக்கப்படும்... எனும் எதிர்பார்ப்பு மிக அதிகமாக தலைதூக்கியிருக்கின்றது.

மக்களவைத் தேர்தல் நடந்தாலும் நடந்தது. எல்லாமே தமிழகத்தில் மாறி விட்டது. ஆளும் கட்சியை எதிர்கட்சி கூட்டணி மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளாக்க ஆரம்பித்து விட்டது. இதனை சமாளிக்கவே திணறி வருகையில் புதிய பிரச்சினைகளும் முளைவிடத் தவறவில்லை.

அந்த வகையில் தமிழக ஆளுநர் ராமன் மோகன் ராவ் எப்போது பதவியிலிருந்து தூக்கப்படவுள்ளார்... அல்லது அவராகவே கௌரவம் கருதி பதவியை விட்டு விலக உள்ளாரா... போன்ற சங்கடங்களும் எழுந்துள்ளன.

இதனை எப்படி சமாளிப்பது என்று வகை தெரியாது தமிழக அரசு திண்டாடி வருவது கவனிக்கத்தக்கது.

தமிழக ஆளுநர் பாரதிய ஜனதா அ.தி.மு.க.வுக்கு அதி விசுவாசமாக செயற்பட்டு வருகின்றார் என்பதே தமிழக எதிர்க்கட்சிகளின் முதல் குற்றச்சாட்டு. அந்த வகையில் தமிழக அரசின் அடாவடித்தனங்கள் அனைத்திற்கும் எந்தவித மறுப்புமின்றி தமிழக முதலமைச்சர் எங்கே கையெழுத்துப் போடச் சொன்னாலும் மறுப்பின்றி தலையாட்டிப் பொம்மையாக இருப்பதாக எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டு விரிகின்றது.

எந்த மாநில ஆளுநரும், மாநில முதலமைச்சர் விடும் தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டும். மாறாக மாநில முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளாது விடின் உடனடியாக மத்தியரசின் கவனத்திற்கு அதனைக் கொண்டு செல்ல வேண்டும்.

ஆனால் தமிழக ஆளுநர் அவ்வாறு செயற்படத் தவறி விட்டதாக மத்தியரசே குறைப்பட்டுக் கொண்டதாக செய்திகளும் இல்லாமலில்லை.

எனவே, ஏற்கனவே நான்கு மாநில ஆளுநர்கள் (கோவா, ஹரியானா உத்தரப் பிரதேசம், குஜராத்) தூக்கப்பட்டு விட்ட நிலையில் தமிழக ஆளுநரும் வெகு விரைவாக தூக்கப்படக் கூடும் எனும் சந்தேச விரிவடைய ஆரம்பித்துள்ளது.

இந்த நிலை ஊர்ஜிதம் ஆகிவி( எனும் அச்சம் காரணமாகத் தான் தமி( ஆளுநர் தனது பதவி விலகலை அறிவி( சனாதிபதி அப்துல் கலாமிடம் கடிதம் அனுப்ப எத்தனித்தார் போல் உள்ளது.

ஆனால் தமிழக அரசு குறுக்கே விழுந்து ஆளுநரை பதவி விலக விடாது தடுத்து விட்டது. அத்துடன் சனாதிபதியிடம் அ.தி.மு.க, ராஜ்சபா எம்.பி.க்கள் ஆளுநரை பதவி விலக அனுமதிக்கக் கூடாது என்று, காலில் விளாத குறையாக கெஞ்சியுள்ள நிலையும் இருக்கின்றது.

இந்த நிலை எதனைக் காட்டுகின்றது. "எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்பது போன்றே இருக்கின்றது. ஏனெனில் தமிழக அரசின் கைப்பாவையாகவே ஆளுநர் செயற்பட்டதால் தான் அ.தி.மு.க. எம்.பி.க்கள் இவ்வாறு சனாதிபதியிடம் விழுந்து விழுந்து கெஞ்ச நேரிட்டுள்ளது.

மாறாக தமிழக ஆளுநர் தமிழக அரசுக்கெதிராக என்றாவது ஒருநாள் ஒரு விரல் நீட்டியிருந்தால், இன்று தமிழக அரசு ஆளுநருக்காக வக்காளத்து வாங்க முற்பட்டிருக்காது. தன்னை சீண்டியதற்கு தக்க பலன் என்று நிச்சயம் மௌனம் சாதித்திருக்கும்.

ஏனெனில் 2002 இல் ஆளுநர் பாத்திமாபீபி மத்தியரசால் தூக்கப்பட்டபோது இதே தமிழக முதலமைச்சர் தான் வாய்மூடிக் கொண்டு இருந்தார். ஆனால் இன்றோ ராமன் மோகன் ராவ்வுக்காக வக்காளத்து வாங்குகின்றார்.

ஏன்... தற்போதைய ஆளுநர் தமிழக அரசுக்கு எதிராக மத்தியரசு எந்த நடவடிக்கை எடுக்க முற்பட்டாலும் நிச்சயம் அவர் அதனை எதிர்ப்பார். ஏனெனில் அவர் பாரதிய ஜனதா ஆட்சியில் அக்கட்சியால் நியமிக்கப்பட்டவர். தற்போது பாரதிய ஜனதா, அ.தி.மு.க உறவு நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் இருந்து நீடிக்கின்றது. இதுவும் மற்றொரு காரணம்.


நடுவில் சனாதிபதி

இதேவேளை மத்திய உள்துறை செயலர் அசோக்குமார் தமிழகத்திற்கு அண்மையில் வந்திருந்த போது தமிழகத்தின் நிலை, செயற்பாடு, சட்டம், ஒழுங்கு, சீர்கேடு.... போன்ற பல விடயங்களை சல்லடை போட்டு சலித்துள்ளார். மத்தியரசின் உளவுப் பிரிவிற்கு தகவல் கொடுத்து விட்டதாகவும் பரபரப்பு தகவலும் இல்லாமலில்லை.

ஏற்கனவே தமிழக எதிர்க்கட்சிகள் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீரில்லை என்று மத்தியரசிடம் முறையிட்டுள்ளன. இவற்றையடுத்தே உள்துறைச் செயலர் தமிழகத்தை ஆய்வுக்குட்படுத்தியதாக நம்பப்படுகின்றது.

எனவே தமிழக ஆளுநரின் பதவிக்கு வேட்டு வைப்பது உறுதியாகிவிட்டது என்றே நம்பத் தோன்றுகின்றது.

இவற்றையெல்லாம் சமாளிப்பதற்காகத்தான் அ.தி.மு.க.வினர் இந்திய சனாதிபதி அப்துல்கலாமிடம் தஞ்சமடைந்துள்ளனர் எனலாம்.

அந்தவகையில் அப்துல்கலாம் சட்டசபையில் சிறப்புரை ஆற்ற வேண்டுமென்று தமிழக சட்டசபை சபாநாயகர் காளிமுத்து கோரிக்கை விடுத்தார்.

அப்துல்கலாம் சட்டசபைக்கு சிறப்புரையாற்ற வரும் போது எதிர்க்கட்சிகள் கட்டாயம் அங்கு இருக்க வேண்டும். இதன் மூலம் எதிர்க்கட்சிகளை சட்டசபைக்கு வரவழைப்பதும், தம் அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை வலுவிழக்கச் செய்வதுமே அ.தி.மு.க. அரசின் திட்டம்.

ஆனால் தி.மு.க.தலைவர் கருணா நிதியோ, அப்துல்கலாம் சட்டசபையில் சிறப்புரையாற்றுவதற்கு முன்னர் சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று போர்க்கொடி தூக்கி விட்டார்.

*ஆளுநருக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் அரசியல் பூனை இப்போதுதான் வெளியே வந்திருக்கின்றது. அதனை விசாரணைக் குட்படுத்த வேண்டும்.

*முன்னாள் ஆளுநர் சென்னாரெட்டி அம்மையாரிடம் பட்டபாடு தெரியாதா... ஆனால் ஏன் இப்போதைய ஆளுநருக்காக மட்டும் இவர்வக்காளத்து வாங்குகின்றார்..?

*.இந்த ஆண்டில் சட்டசபை 15 நாட்களே நடந்தது? அதனை விசாரிக்க வேண்டும்.

*நிதிநிலை அறிக்கை எதிர்க்கட்சி இல்லாமலேயே நிறைவேற்றப்பட்டது முறையா?

*.இவற்றையெல்லாம் விசாரிக்காமல் சனாதிபதி சட்டசபைக்கு உரையாற்ற வருவதென்பது "மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால் குளிர் மலர்ச்சோலை கோவென்று அழாதா" எனும் பாரதிதாசன் பாடல் உண்மையாகிவிடும்.

இவ்வாறு கேள்விக்கணைகளால் முட்டுக்கட்டை போட்டு, சனாதிபதி சட்டசபையில் உரையாற்ற வராது தடுத்துவிட்டார் என்று தான் கூறவேண்டும்.

இவற்றையெல்லாம் பார்த்தால் தமிழக ஆளும் கட்சியைச் சுற்றி எங்கு திரும்பினாலும் பிரச்சினைகள் தான் வலுக்கின்றன. என்றே நம்பத்தோன்றுகின்றது. அதற்கு முக்கிய காரணம் தி.முக.தலைமையிலான எதிர்க்கட்சியினர் தான் என்பது ஆளும் கட்சிக்கு புரியாத, தெரியாத விடயமல்ல.

**அ.கலைவாணி**

ஏற்கனவே சட்டசபைக்கு எதிர்க்கட்சிகள் வருவதில்லை என்பதுடன் சட்டசபைக்கு வெளியே சட்டசபைபோன்று நடத்துவதும், கூச்சல் குழப்பம் விளைவிப்பதும் சாதாரண விடயம் போல் ஆகிவிட்டது.

அத்துடன் தமிழக அரசின் அதிரடி நடவடிக்கைகள் முதல் சட்டம் ஒழுங்கு மீறல் வரை, அனைத்தையும் தி.மு.க.கூட்டணி மத்தியரசிடம் ஏற்கனவே சமர்ப்பித்திருக்கின்றது.

அதற்கு வலுச்சேர்ப்பது போன்றுதான் தற்போது ஜெயலட்சுமி விவகாரம் வெளிவந்துள்ளது. தமிழக காவல்துறையின் முக்கிய அதிகாரிகள், மந்திரிகளின் உதவியாளர்கள் என தன்னுடன் பாலியல் ரீதியில் தொடர்புபட்டவர்களென ஜெயலட்சுமி வெளியிடும் நீண்ட பட்டியலில் யார் இடம்பெறுகின்றார்கள் என்பது தமிழகத்தில் நாளாந்தம் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது.

எனவே இவையனைத்தும் தமிழக காவல் துறையினரின் கண்ணியத்தை எடுத்துக்காட்டுவதாக தெரியவில்லை. இதனை மத்தியரசு எப்படி அணுகவுள்ளது என்பது தமிழக அரசை பொறுத்தவரை மற்றோர் சந்தேகமான வினா.

ஏனெனில் பிரதமர் மன்மோகன்சிங் சென்னை வருவதாக பரபரப்பாக கூறப்பட்டது. ஆனால் பின்னர் பிரதமர் சுகயீனம் காரணமாக வரமுடியவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் தி.மு.க.கூட்டணியின் ஆட்சேபத்தையடுத்தே பிரதமர் சென்னை வரவில்லை என்று மறைமுகமான கருத்தும் இல்லாமல் இல்லை.

எனவே தி.மு.க.வின் நகர்வின் படிதான் மத்தியரசு தமிழக விடயத்தில் முடிவுகளை மேற்கொள்வதாக சந்தேகமும் எழுந்திருக்கின்றது.

இதனால்தான் தமிழக அரசு எப்போது வேண்டுமானாலும் கலைக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது.


ராமன் மோகன் ராவ்

ஆனால் அ.தி.மு.க.அரசை 356 சட்டம் மூலம் கலைப்பதில் தி.மு.க.கூட்டணியான எதிர்க்கட்சிகளுக்கு அணுவளவும் விருப்பமில்லை என்றும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

ஏனெனில் 356 ஆவது சட்டம் கொண்டு அ.தி.மு.க. அரசு கலைக்கப்படுவது தமக்குத்தான் எதிர்கால சட்டசபை தேர்தலில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று அக்கூட்டணி வலுவாக நம்புகின்றது.

அதாவது அ.தி.மு.க.அரசு கலைக்கப்படுவதால் ஜெயலலிதா மீதான அனுதாப அலை எதிர்கால சட்டசபை தேர்தலில் வாக்குகளாக மாறிவிடும் என்பதுதான் எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பு.

எனவே தமிழக அரசை மத்தியரசு எவ்வாறு கையாளவுள்ளது...? அரசியல் நிர்ணயச் சட்டம் 355 சட்டத்தை பயன்படுத்தி தமிழக அரசை முடக்கவுள்ளதாக ஊகம் ஒன்று எழுந்திருக்கின்றது.

அதற்காகத்தான் தமிழக ஆளுநர் பதவி தூக்கப்படுவார் என்றும், புதுடில்லி ஆளுநரை வெகுவிரைவில் தூக்குவதுடன் தமக்கு சார்பான நபரை ஆளுநராக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்பட்டது. ஆனால் தற்போது ஆளுநர் பதவி தூக்கப்படுவது சனாதிபதியினால் தாமதப்படுகின்றது என்றாலும் தமிழக அரசு கலைக்கப்படவோ, முடக்கப்படவோ கூடமுடியும்.

ஏனெனில் 1991 இல் விடுதலைப் புலிகளை ஆதரித்ததாக குற்றம் சாட்டப்பட்டு முதலமைச்சர் கருணாநிதியின் அரசு கலைக்கப்பட்ட போது தமிழக ஆளுநர் எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் பிரதமரின் உத்தரவில் கலைக்க முடியும் என்று தமிழக ஆளுநரின் ஆட்சேபத்தையும் மீறி தமிழக அரசு கலைக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கின்றது. இதனை வைத்துப்பார்க்கையில் தமிழக அரசின் ஆயுட்காலம் கொஞ்சக்காலம் தான் போல் இருக்கின்றது. அது விரைவில் 356 ஆவது சட்டம் மூலம் கலைக்கப்படுமா... அல்லது 355 ஆவது சட்டம் மூலம் முடக்கப்படவுள்ளதா... என்பதே தற்போதைய வினாவாகும்.

# பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் மனோ நிலையில் அரசில்லை!

கிழக்கில் பதட்டத்தைத் தணிக்க அரசாங்கம் விரும்பவில்லை என்பதையே புல்லுமலைச் சம்பவம் தெளிவாக உணர்த்துவதாகவுள்ளது. அத்தோடு கிழக்கில் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றதோ, இல்லையோ கிழக்கில் பதட்ட நிலை நிலவுவதாகவும் அது காட்டிக்கொள்ள விரும்புகின்றது.

புல்லுமலையில் விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி தாக்கப்பட்டதில் சிறிலங்கா இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்பதற்கு அதன் சுற்றுப்புறச் சூழலும், தாக்குதல், தாக்குதலின் பின் இறந்தவர்களைக் காவிச்செல்ல வற்புறுத்தப்பட்ட கண்ணிவெடி அகற்றும் நிறுவன ஊழியர்களும் சாட்சியாகவுள்ளனர்.

இதனைத் தவிரத் தாக்குதல் நடத்தியவர்களைப் பிடித்துவந்து இவர்கள் தான் தாக்குதல் நடத்தினார்கள் என முன்னிறுத்தி, அவர்களும் நாங்கள் தான் தாக்கினோம் என ஒப்புக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படின் அது சாத்தியமாகமாட்டாது.

இதேவேளை, புல்லுமலைத் தாக்குதல் சம்பவத்திற்கு இரு தினங்களுக்கு முன்பாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது கருணாகுழுவினர் தாக்குதல் ஒன்றை நடத்தியதாகவும், இதில் எட்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் சிறிலங்கா அரச தொலைக்காட்சி உண்மைக்குப்புறம்பான-அதாவது நடக்காத ஒருசம்பவம் குறித்து கற்பனையில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

அரசாங்கத் தரப்பின் இந்நடவடிக்கைகள் அரசாங்கம் கிழக்கில் பதட்டத்தை அதிகரிக்கவும், அங்கு அமைதியானதொரு சூழ்நிலை நிலவவில்லை என்பதை வெளிக்காட்டவும் முனைந்து நிற்பதையே காட்டுவதாய் உள்ளது. இதன்மூலம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதைத்தாமதப்படுத்த அரசாங்கம் முற்பட்டு நிற்கின்றது.

கிழக்கில் பல மாதங்களாகத் தடைப்பட்டுப் போயிருந்த இராணுவம்-புலிகள் இடையிலான சந்திப்பானது மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிவிப்பு இம்மாதத் தொடக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது. இச்சந்திப்பு இடம்பெறும் பட்சத்திலேயே கிழக்கில் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலையை முடிவிற்குக் கொண்டுவரமுடியும் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு நம்பிக்கை கொண்டிருந்தது.

இதன் காரணமாக விடுதலைப் புலி களுக்கும்-இராணுவத்திற்கும் இடையிலான சந்திப்பை ஏற்பாடுசெய்வதில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டே தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். இவரது பகீரதப் பிரயத்தனத்தின் காரணமாகவே மீண்டும் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பிற்கு திகதி நிர்ணயம் செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் கடந்த மூன்றாம் திகதி சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியான பிரிகேடியர் வஜிர விஜே குணவர்த்தனவின் கோரிக்கையின் அடிப்படையில் சந்திப்பானது பிற்போடப்பட்டது. அதாவது இச்சந்திப்பில் தானும் கலந்துகொள்ள விரும்புவதாகவும், இதனால் சந்திப்பிற்கான திகதியைச் சற்றுப் பின்தள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில் ஏழாம் திகதிக்கு இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் இச்சந்திப்பும் இடம்பெறவில்லை. இதற்கான காரணமும் தெரிவிக்கப்படவில்லை. இதே வேளை நோர்வே சென்றிருந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் திரும்பவில்லை.

ஆனால், இதில் முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் விடுதலைப்புலிகள் எந்தவித முட்டுக்கட்டையும் போடவில்லை என்பதாகும். அதேவேளை, இரண்டாவது சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதான சந்திப்பு அறிவிப்பில் அடுத்த சந்திப்பிற்கான திகதியும் அறிவிப்புச் செய்யப்பட்டதாக இல்லை. அதாவது அடுத்த சந்திப்பு ஒன்று நடத்தப்பட வேண்டுமானால் திரும்பவும்பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் உருவாகி இருந்தது.

ஆனால், அத்தகையதொரு பேச்சுவார்த்தைகளில் மீண்டும் சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்கான இணக்கப்பாடுகள் ஏற்படுத்த முடியாததொரு சூழ்நிலையை உருவாக்குவதில் சிறிலங்கா இராணுவத்தரப்பு முனைப்பாகவுள்ளதையே அதன் அண்மைய நடவடிக்கைகள் வெளிப்படுத்துபவையாகவுள்ளன. அதாவது கிழக்கில் பதட்டத்தை உருவாக்குவதன் மூலம் இதனைத் தவிர்த்துக் கொள்ள இராணுவத்தரப்பு முற்பட்டுள்ளது எனலாம்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணு வத்தினருடனான சந்திப்புக்களை விடுதலைப்புலிகள் இராணுவத்தரப்பால் ஏற்படுத்தப்பட்ட பதட்டமானதொரு சூழ்நிலையினாலேயே இடைநிறுத்தியிருந்தனர். இந்நிலையில் மீண்டும் கிழக்கில் வன்முறையை அரசாங்கம் தூண்ட முற்படுகையில் புலிகள்-இராணுவம் சந்திப்பு என்பது எவ்வளவு தூரம் சாத்தியப்பட முடியும்?

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் தனியாக மட்டக்களப்பில் பதட்டத்தை உருவாக்குவதாக மட்டுமல்ல, அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சு வார்த்தைகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாகவுமே கொள்ளவேண்டும்.

ஏனெனில் கிழக்கில் இத்தகையதொரு பதட்டம் நிலவுகையில் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றல் என்பது எவ்வாறு சாத்தியப்பாடானதாக இருக்க முடியும். பேச்சுக்கள் நடத்தப்படினும் அதில் எவ்வாறு முன்னேற்றம் காணமுடியும்?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தும் சரி அவரது ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமும் சரி அவர்கள் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்பதற்கான விருப்பத்தைக் கொண்டவர்களாக இல்லை. ஆரம்பம் முதலே ஏதோ ஒரு வகையில் பேச்சுவார்த்தைகளை பிற்போடும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாகசபை குறித்துப் பேச முடியாது இறுதித்தீர்வு பற்றியே பேச முடியுமெனத் தெரிவித்தார். பின்னர் இடைக்கால நிர்வாகம் குறித்தும் இறுதித்தீர்வு பற்றியும் ஒரே நேரத்தில் பேசப்பட வேண்டும் என்றார். இதனால் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதென்பது நெருக்கடியானதொரு கட்டத்தை எட்டியது. இதே வேளை புலிகள் இயக்கத்திற்குள் கருணா ஏற்படுத்திய குழப்பத்தை சிறிலங்கா படைத்தரப்பும், அரசாங்கமும் தமக்கு சாதகமாக்கிக் கொண்டன. கருணாவிற்கு ஆதரவு அளித்து சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்க முனைந்தது.

இதன் விளைவானது மட்டு. மாவட்டத்தில் பதட்டமானதொரு சூழ்நிலை ஏற்பட்டது. நிலைமை இவ்வாறே தொடர்ந்தால் யுத்த நிறுத்தம் அபாயத்திற்கு உள்ளாகலாம் எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரிக்கை செய்யும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது.



“அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தனியாக மட்டக்களப்பில் பதட்டத்தை உருவாக்குவதாக மட்டுமல்ல, அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளாகவுமே கொள்ள வேண்டும்.”

ஆயினும் இப்பதட்டமானது முற்றாகத் தணிய முன்னரே கண்காணிப்புக்குழுவின் மேற்கொண்ட முயற்சி காரணமாக விடுதலைப் புலிகள் இராணுவத்தினருடனான சந்திப்பை நடத்த உடன்பட்டனர். தமது அரசியல்துறைப் போராளிகள் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் தாக்குதல் நடத்தப்பட்டு இருவர் பலியான சம்பவமானது இடம்பெற்று ; ஒரு வாரத்திற்குள் ளேயே புலிகள் சந்திப்பதற்கு ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் இராணுவத் தரப்பு இதற்கு ஏற்றதான செயற்பாடுகளை கொண்டதாக இல்லை.

அவ்வாறு இல்லாது இராணுவத் தரப்பு சமாதான முயற்சிகளில் ஈடுபாடு கொண்டதாக இருக்குமானால் புல்லுமலையில் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது தாக்குதலை மேற்கொண்டிருக்க மாட்டாது. அத்தோடு உண்மைக்கு மாறான வகையில் யுத்த கால பிரச்சாரத்தை ஒத்த அறிவிப்புக்களையும் வெளியிட்டிருக்கமாட்டாது.

இதில் இராணுவத் தரப்பு மட்டும் தனித்தியங்குவதாக்க் கொள்ள முடியாது. சனாதிபதி சந்திரிகாவும் சரி, ஆளும் கட்சியினரும் சரி சமாதான முயற்சிகளை இழுத்தடிப்பதிலும் திசை திருப்பி விடுவதிலுமே அக்கறை கொண்டவர்களாகவே உள்ளனர். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்து வரினும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விடுதலைப்புலிகளின் நகல்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து உறுதியான பதில் எதுவும் அளிப்பதாக இல்லை.

மாறாக தேசிய ஆலோ சனைக குழு ஒன்று அமைப்பது குறித்தும் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தன்னைத் தயார் படுத்திக் கொள்வது தொடர்பாகவும் பேசுவதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றது. இதேசமயம் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சர்வதேச சமூகத்தின் முன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு அரசாங்கம் தயாரகவுள்ளது. என்ற தோற்றப்பாட்டை உருவாக்கவும் முற்படுகின்றது.

இந்நோக்கத்தில் அரசாங்கத் தரப்பு ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது என்று. கூடக்கூறலாம். சிலநாடுகள் சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளார் எனத்தெரிவிப்பதில் இருந்தே இதனை விளங்கிக்கொள்ளுதல் முடியும்.

சுருக்கமாகக் கூறுவதானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உருவாக்குவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பதே யதார்த்தமாகும். ஆனால் அரசாங்கம் இதனை மூடிமறைத்து சமாதானப் பேச்சுவார்த் தைகளுக்குத் தன்னைத் தயார் படுத்துமாப் போன்ற தொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தவே முற்படுகின்றது.

மறுவளமாக விடுதலைப்புலிகளின் பொறுமையைச் சோதனைக்குள்ளாக்கும் வகையில் அவர்களைச் சீண்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு யுத்த நிறுத்தத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகளை ஆயுதப்படைத்தரப்பின் மூலம் மேற்கொள்வதிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் சமாதான முயற்சிகளும் யுத்த நிறுத்தத்திற்கும் ஊறுவிளைவிக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது எனின் மிகையாகாது.

— ஜெயராஜ் —

# அளம்பில் திலீபன் மருத்துவமனையில் வெளிநாட்டு வைத்திய நிபுணர் சிகிச்சை

அளம்பில் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் லண்டனிலிருந்துவருகை தந்திருந்த வைத்தியகலாநிதி பொன்னம்பலம் கந்தசாமி நேற்று முன்தினம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகவும், தற்போது லண்டனில் வசித்து வரும் இவர் தனது சேவையினைத் திலீபன் மருத்துவமனையூடாக மக்களுக்கு ஆற்றவேண்டும் என்றே தான் வந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும்தெரிவிக்கையில்; குறைந்த அளவு வசதியுடன் உணர்வு பூர்வமான சேவையினைத் திலீபன் மருத்துவமனையினர் மேற்கொள்வதால் இங்கு சிகிச்சை அளிக்கும் போது எனக்கு இலகுவாக இருந்ததென்றும், நவீன வைத்திய வசதிகள் இல்லாதபோதும் அறிவு பூர்வமாக செயற்படுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கின்றதென்றும் அவர் கூறினார்.

அளம்பில் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தினர்,அளம்பில் மகளிர் மாதர் சங்கத்தினர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பினை வழங்கியே இம்மருத்துவரை வரவழைத்தனர்.சுமார் 122 நோயார்கள் சிகிச்சை பெற்றனர். கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை, பூநகரி திலீபன் மருத்துவமனை, மாங்குளம் திலீபன் மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளித்துள்ளதாகவும் அடுத்த வாரம் முல்லைமாவட்டம் கட்டம் I வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்போவதாகவும் வைத்திய கலாநிதி பொ. கந்தசாமி தெரிவித்தார். (20)

# திலீபன் நினைவு நாளை முன்னிட்டு சிரமதான நிகழ்வு

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு இயக்கச்சி வலயத்தில் சிரமதானப் பணிகள் கடந்த 08,09,10ஆம் திகதிகளில் கிராமரீதியாக நடைபெற்றன. இதில் மாதர் சங்க உறுப்பினர்கள், ஊற்று நிறுவன உறுப்பினர்கள், கமக்கார அமைப்புக்கள், கி.அ.சங்க உறுப்பினர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர் அனைவரும் இணைந்து மேற் கொண்டனர். இதில் வலய தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கேதீஸ் கலந்து கொண்டார்.

# தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள்

(அலுவலக செய்தியாளர்)

நிதித்துறை ஆயப்பகுதி நிலையங்களில் பொதுமக்களால் தவறவிடப்பட்டுக் கண்டெடுக்கப்பட்ட பின்வருவோரது பல்வேறுபட்ட அடையாள அட்டைகளைச் சம்பந்தப்பட்ட வர்கள் தங்களது அடையாளங்களை நிருபித்து மேலாளர், களஞ்சியப் பிரிவு, நடுவப் பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் பணி நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

சிவநாதன் நிறூஜினி 856882713v, ஆறுமுகம் ஜெயபால 551530884v, வடுவாவலகே அருணநில்வன கருணரத்ண 650551427v, நாகமுத்து சிதம்பரப்பிள்ளை 551801810v, மைக்கல் சூசைப்பிள்ளை 651211921v, கணபதிப்பிள்ளை செல்வேந்திரராசா 560430051v, செல்வநாயகம் யோகேஸ்வரன் 822955193v, வினாசித்தம்பி விமலேஸ்வரன் 660803009v, அல்வீனப்பர் அமலசேகரம் 622151049v, கனகசபை சிறிஸ்கந்தராசா 551462277v, சிவநாதன் தவநாயகி 585463175v, நாகேந்திரம் சந்திரகுமாரன் 591591665v, சண்முகம் குணநாயகம் 531564537v, வேலுப்பிள்ளை இராசசேகரம் 592534258v, வேலாயுதம் கிட்ணம்மா 605961843v, கந்தசாமி சிவமலர் 748454624v, சுப்பிரமணியம் காண்டீபன் 790663055v, சோதிநாதன் அகில்ராஸ் 790484339v, இராஜ இரத்தினம் இரத்தின கோபால் 370052239v, இராஜலட்சுமி கணேசன் 515052526v, தணிகாசலம்பிள்ளை விஷ்ணுகுமார் 811951455v, வேலு சந்தனம் 512672094x, சிவனு இறாமாய் 476263298x, குணசீலன் சசிகுமார் 763064751v, குமாரசாமி ஜெயகௌரி 688050839v, ஈஸ்வரி தேவி இராசரத்தினம் 416060924v, ஜானக கபிலறணசிங்க 700892409v, சுந்தரம் இராஜேந்திரன் 593333507v, விஸ்வரஞ்சினி ஸ்ரீநேசா 556641277v, இராசமாணிக்கம் மகேந்திரராசா 770364965v, சவிரிமுத்து இரத்தினகுமார் 603562917v, ஆனந்தர் தயானந்தன் 781084409v, காரியவசம் வடுவன்னகமகே இந்திராணி குலசேகர626001963v, நாகலிங்கம் ஜெயகரன் 96/BS/05, யோகராஜா பாலசங்கர் 2002/A/230, சிந்துஜா துரைசிங்கம 091041787, நாகபூஷணி சிவராசா 0902015090, நகுலேந்திரன் அருண் மங்கை 0901022740, மகேஸ்வரி பரராசசிங்கம் 0907010346, சிங்காரவேலு ஜெயகரன் 0908020448, பிரேமாவதி குகேந்திரன் 091023177, மகாலிங்கம் சிவமணி 0907018687, S.சஜீதா 5004, தெய்வானை 1118, அமர பாலசிங்கம் சந்திரலதா, W.A.D.A ரஞ்சித்குமார் 597151, கோபாலபிள்ளை சிவபாலன் 69254நி, கனகராஜ் கனேந்திரம் D/L-294273, சுவாமிநாதன் பாலேந்திரன் NDL 0014399, கு.ஜெபசெல்வம் A-072531, K.G.R பெர்னாண்டோ A-011876, P.மாறன் GQ-9907, S.நடராசா R746918, அஞ்சலிங்கம் தர்மதேவா 34082. (சோ,கு)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழுங்கல்



(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வேள்ட்விசன் நிறுவனத்தின் ஆதரவில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் கற்றல் உபகரணப் பெட்டிகளும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கலும் நடைபெற்றது.

கடந்த வியாழன் காலை 10.00 மணிக்கு கிளி/அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தலைவர் சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் நைல்ஸ், போஷாக்கு பணிப்பாளர் அன்ரன், கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் திரு , முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செல்வி. யோ.நிலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் நிறுவனங்களின் முன்பள்ளி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ,தீ)


**FORUT VANNI**

*Campaign for Development & Solidarity*
C.T.B Road, Selvanagar, Kilinochchi.
E-mail:- arne@forut.lk

**VACANCIES**

FORUT, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness.

**Documentation officer:-**

| Position | Minimum Requirements | Tasks |
|---|---|---|
| Documentation Officer | • Graduate or G.C.E (A/L) (fully qualified)<br>• Excellent proven command of English and Tamil, preferably some knowledge of Sinhala.<br>• Excellent proven computer skills.(Ms Office)<br>2 years experience in writing documents and reports<br>• Ability to conduct research and report.<br>Ability to gather and transmit information and information management<br>• Valid mo-bike riding license<br>Age 23-45 years | • Maintain databank on complete programme.<br>• Net working , record keeping, & data base management<br>• Produce monthly / Quarterly/Half-yearly / Annual reports<br>• Visit field and document information as case story or report<br>• Publish newsletter routinely to carry project information<br>• Document workshops, seminars and reviews<br>• Write minutes / reports |

**Field coordinator:-**

| Position | Minimum Requirements | Tasks |
|---|---|---|
| Field Coordinator | • Graduate in sociology or eqt & 2 years experience in social mobilisation<br>OR<br>• GCE(A/L) with 3 years NGO work in social mobilisation<br>OR<br>• GCE(O/L) with 5 years NGO work in social mobilisation<br>AND<br>• Excellent proven computer skills (Ms Office)<br>Valid mo-bike riding license<br>Age 23-3 years | • Social mobilisation: Facilitate the target group to achieve increased participation<br>• Capacity build CBOs /Partners to maintain proper accounts and minimum office documents<br>• Work with identified vulnerable people to provide appropriate support<br>• Conduct regular follow-up programmes to ensure sustainable results<br>• Ability to work on gender related issues<br>• Monitor & Analyze progress monthly<br>• Maintain base line data and analyze impact |

Applicants, if selected, should be wi g to accept positions in any part of the project locations within Kilinochchi and Mullaitivu districts of FORUT Vanni project. All positions require extensive field trav from the office locations. Hence, applicants should be prepared to devote time in field under difficult conditions. **Females are encouraged to apply for all positions** Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for intervie**.

Completed applications should be forwarded to reach the under mentioned address **on or before 20th of September 2004**. Please indicate the post applied for on the top left hand corner of the envelope.

**Address:-**
Program Manager,
FORUT, C.T.B Depot road,
Selvanagar, Kilinochchi.
E-mail:- arne@forut.lk

(சி-10220)

# பெண்களின் விகிதம் குறைவடைவதை கட்டுப்படுத்த விசேடதிட்டம் அமுல்!

(பெங்களூர்)

**இந்தியாவில் பெண்கள் விகிதம் குறைந்து வருவதை கட்டுப்படுத்துவதற்கு தேசிய குடும்ப நலத்திட்டம் ஒன்றை அடுத்த இரண்டு மாதத்தில் செயற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.**

பெங்களூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் புதிய திட்டம் பெண் குழந்தைகளை ஊக்குவிப்பதாக அமையும் என்றும், பெண் குழந்தைகளுக்கு எதிராகவுள்ள சமுதாயப் போக்கை மாற்ற ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இதற்கு உதவியாக கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா எனும் சட்டத்தை தீவிரமாக தடை செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



காஞ்சிபுரத்தில் வைகோ நடை பயணம் வந்த போது

# அ.தி.மு.க.வின் தோல்விக்குப் பொறுப்பேற்று தமிழக முதலமைச்சர் பதவி விலகுவாரா?

## மத்திய இணையமைச்சர் எஸ். இளங்கோவன்

(சென்னை)

மக்களவைத் தேர்தலில் தோல்வியை ஏற்று கேரளாவில் ஏ.கே. அன்ரனி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதைப் போல அ.இ.அ.தி.மு.க.வின் தோல்விக்குப் பொறுப்பேற்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும்.

இவ்வாறு மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் இ.வி.கே.எஸ். இளங்கோவன் வலியுறுத்தியுள்ளார்.

மதுரையில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சேது சமுத்திரத்திட்டம் செயலாக்கம் பெறுவதற்குத் தாமே காரணம் என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்திருப்பதை குறை கூறியுள்ளார்.

பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பல தலைவர்கள் சேது சமுத்திரத்திட்டம் குறித்து குரல் எழுப்பியதன் பலனாக்வே இத்திட்டம் தற்போது தொடங்கப்படவுள்ளது என்றும், இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்தபோதிலும் பிரதமர் மன்மோகன்சிங் ஆட்சியில் தான் செயற்பாட்டிற்கு வந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# மாலைதீவு சிறையில் வாழும் இரு இளைஞர்களை மீட்கப் பணிப்பு

(சென்னை)

மாலைதீவில் உள்ள 2 தமிழ் இளைஞர்களை மீட்க உத்தரவிட்டிருப்பதாக வைகோவுக்கு மன்மோகன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

மாலைதீவு சிறையில் சரவணன் என்ற இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டதாகவும், ராஜன், கமல் ஆகிய இரண்டு இளைஞர்கள் தொடர்ந்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருவதாகவும் அவர்களை உடனடியாக மீட்டுத்தர வேண்டுமென்றும் கோரி பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடந்த ஒகஸ்ட் 12 ஆம் நாள் வைகோ கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்திற்கு பிரதமர் மன்மோகன்சிங் பதில் எழுதியுள்ளார். அதில் "மாலைதீவு சிறையில் இரண்டு தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருவதாகத் தாங்கள் எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வெளியுறவுத்துறை அமைச்சகத்தை கேட்டுக் கொண்டுள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.



பிரதமர் அலுவலகத்துக்கான மத்திய இணை அமைச்சர் பிரிதிவிராஜ் சவான் நேற்று முன்தினம் மாலை சென்னை வந்து தி.மு.க.தலைவர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

# நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்யத் தயார் யாத்திரையை ஆரம்பித்து உமாபாரதி சபதம்

உமாபாரதியின் மூவர்ணக் கொடி யாத்திரையை அத்வானி தொடக்கி வைத்தார். யாத்திரை புறப்படும் முன் பேசிய உமாபாரதி நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயார் என்று ஆவேசமாகக் கூறினார்.

கருநாடக மாநிலம் ஹிப்ளியில் பத்து ஆண்டுக்கு முன் நடந்த கலவர வழக்கில் மத்திய பிரதேச பா.ஜ முதல்வராக இருந்த உமாபாரதிக்கு நீதிமன்றம் கைது ஆணை பிறப்பித்தது அதைத் தொடர்ந்து அவர் முதல்வர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு ஹிப்ளி நகர நீதிமன்றில் சரணடைந்தார். அதன் பிறகு அவர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். உமாபாரதி மீதான வழக்கை வாபஸ் பெறக்கோரி கர்நாடக அரசு மனுத்தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அவரை நீதிமன்றம் கடந்த 6 ஆம் திகதி விடுதலை செய்தது. அதைத் தொடர்ந்து பெங்களூரில் நடந்த அகில இந்திய பா.ஜ நிர்வாகிகள் கூட்டத்தில் உமாபாரதி ஹிப்ளியில் இருந்து ஜாலியன் வாலாபாக்குக்கு மூவர்ணக் கொடியுடன் யாத்திரை செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன் படி ஹிப்ளியில் மூவர்ணக்கொடி யாத்திரையை உமாபாரதி நேற்றுத் தொடங்கினார். முன்னதாக யாத்திரை புறப்படும் இடத்திற்கு அத்வானி வந்தார். அவரிடம் 1907 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத் தியாகி மேடம காமா தயாரித்த மூவர்ணக் கொடி வழங்கப்பட்டது. அதை அசைத்து உமாபாரதியின் யாத்திரையை அத்வானி தொடக்கி வைத்தார். அப்போது அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பா.ஜ தொண்டர்கள் விண்ணதிர கோஷமிட்டனர்.



உமாபாரதியின் மூவர்ணக் கொடி யாத்திரையை தொடக்கி வைக்கும் முன் உமாபாரதி மற்றும் பா.ஜ.தலைவர்களுடன் அத்வானி கைகோர்த்து நிற்கும் காட்சி.

# கஜேந்திரா படத்தை வெளியிடத் தடை

(சென்னை)

நடிகர் விஜகாந்த் நடித்துள்ள கஜேந்திரா படத்தை வெளியிட இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விஜயகாந்த் நடிப்பில் கஜேந்திரா பிரமாண்டமான படத்தை வி.ஏ. துரைதயாரித்தார். படத் தயாரிப்பிற்காக ஜஸ்வந்த் பண்டாரி என்ற சினிமா காப்புறுதியாளரிடம் துரை கடன் வாங்கினார். கடனை முழுவதும் திருப்பிச் செலுத்திய பிறகு கஜேந்திரா வெளியிடப்படும் என்று இரண்டு பேருக்கும் இடையே ஒப்பந்தம் உருவானது. இந்த நிலையில் படப்பிடிப்பு முடிந்து கஜேந்திரா படத்தை வெளியிடுவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பத்தாம் திகதி இந்தப் படம் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சென்னை நீதிமன்றில் ஜஸ்வந்த் பண்டாரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

கொடுத்த கடனை வி.ஏ துரை முழுவதுமாகத் திருப்பித் தரவில்லை என்றும் மொத்தப் பணம் திருப்பித் தரும் வரை கஜேந்திரா படத்தை திரையிட அனுமதிக்கக் கூடாதென்றும் மனுவில் பண்டாரி கூறியுள்ளார்.

இதையடுத்து கஜேந்திரா படத்தை வெளியிட நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்தது. இந்த மனு மீதான விசாரணைகளை நாளை 13 ஆம் திகதி தொடர்ந்து நடக்கவிருக்கிறது.

# கல்விக்காக நவீன செயற்கைக்கோள் செப்-20இல் விண்ணுக்குப் பயணம்

(சென்னை)

நாட்டில் முதல் தடவையாக கல்விக்காக நவீன செயற்கை கோள் 20 ஆம் திகதி ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள செயற்கை கோள் ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது.

கல்விக்காக முதன் முதலாக விண்ணுக்கு செலுத்தப்படவுள்ள எஜுசேட் செயற்கைகோள் ஓகஸ்டில் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்திற்கு கொண்டு வரப்பட்டு சோதனை செய்யப்பட்டன. பின்பு அது ஜி.எஸ்.எல்.வி.ரொக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ளது. சில நாட்களுக்குள் செயற்கைகோளும் ரொக்கெட்டும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் சோதனை செய்யப்படும்.

செயற்கைகோள் செலுத்துவதற்கான வெள்ளோட்டம் வரும் 16 ஆம் திகதி நடைபெறுகிறது. 20 ஆம் திகதி செயற்கைகோள் விண்ணிற்கு செலுத்தப்படுகிறது.

# சேதுசமுத்திரத் திட்டத்தை முன்னிட்டு பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம்

## - தி.மு.க. தலைவர் வேண்டுகோள்

(சென்னை)

சேது சமுத்திரத்திட்டத்திற்கு யார் காரண கர்த்தா என போட்டி போட்டு சுவரொட்டிகளை ஒட்டி பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம் என்று கூட்டணிக் கட்சியினருக்கு கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; 150 ஆண்டு காலமாக பல பெருமக்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மத்திய அரசின் சார்பில் சில பிரதமர்கள் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், இப்போது இறுதியாக தமிழகத்தில் சனநாயக முற்போக்குக் கூட்டணி புதுவை உட்பட நாற்பது தொகுதிகளில் வெற்றி பெற்று அந்த வலிமையின் காரணமாகவும் இடதுசாரிக்கட்சிகளின் ஆதரவு அடிப்படையிலும், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி திருமதி சோனியா காந்தி தலைமையில் அமைந்த நிலையிலும், அந்தக் கூட்டணியின் அரசு டாக்டர் மன்மோகன் சிங் தலைமையில் இயங்கியிடும் இந்த நல்ல நேரத்தில் வெறும் சொல்லளவிலும், வாக்குறுதிகள் அளவிலும், ஆய்வுகள் அளவிலும், தேர்தல் அறிக்கைகள் அளிவிலும், செயற்றிட்டத்தில் இடம்பெற்ற அளவிலும் இருந்து, கேள்விக்குறியாகிப்போன சேது சமுத்திரத் திட்டம், செயலாக்கத்திற்கு வந்துள்ளது என்றால் இப்போது மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைவதற்கு வாக்களித்தவர்களையும், இந்தக் கூட்டணி அரசு அமைந்திட வழிவகுத்தவர்களையும், துணை நின்றவர்களையும் ,துணைநிற்பவர்களையும் தான் இந்தப் பெருமை சேரும் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

தி.மு.க வினர் சிலரால் ஒட்டப்பட்டுள்ள நன்றி அறிவிப்பு சுவரொட்டிகளில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் அத்துடன் அதற்குத் துணையாகக் குறைந்த பட்ச பொதுத் திட்டம் தயாரித்த குழுவின் தலைவராக அமைந்துள்ள திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும் நன்றி கூறும் சுவரொட்டிகளுடன் தேவையில்லாமல் எனக்குத் தெரியாமல் என்னையும் பாராட்டி சுவரொட்டிகள் ஒட்டியுள்ளார்கள். இது ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் ஒரு கூட்டு முயற்சி என்பதை மறந்துவிடக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ICC CHAMPIONS TROPHY
ENGLAND 2004

12 TEAMS
15 MATCHES
16 DAYS
ONE WINNER

# சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்திற்கு அபார வெற்றி





ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்துக்காக நேற்று நிறைவடைந்த இங்கி லாந்து-சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியில் இங்கிலாந்து அணி 152 ஓட்டங்களால் வெற்றி பெற் றது.
நேற்று முன்தினம் நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான போட்டி 38 ஓவர்கள் பந்து வீசிய நிலையில் மழையால் தடைப்பட்டது. இந்நிலையில் இப் போட்டி நேற்று விட்ட இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பமானது.
தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டக்களை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது.
துடுப்பாட்டத்தில் கொலிங்வூட் 93 பந்துகளை எதிர் கொண்டு 80 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். சோலங்கி 62, ஜோன்ஸ் 38 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர். றெயின்ஸ்போட், ஹொண்டோ தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.
300 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 39 ஓவரில் 147 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.
டட்டண்டா தைபு 40, சிக்கும்பரா 42 ஓட்டங்களை முறையே அதிக பட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச் சில் கார் மிசன், பிளிண்டொப் தலா 3 விக்கெட்டுக்களையும்,டரன்கௌவ் ஹைலஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# கென்யாவை 98 ஓட்டங்களால் தோற்கடித்தது இந்திய அணி



ஐ.சி.சி கிண்ணத்திற்கான இந்திய- கென்ய அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்திய அணி 98 ஓட்டங்களால் கென்ய அணியை தோற்கடித்தது.
"சீ"குழுவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி நேற்று தனது முதலாவது போட்டியில் கென்யாவை எதிர் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கென்ய அணி இந்தியாவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றது.
துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கங்குலி 124 பந்துகளைச் சந்தித்து 90 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 79 ஓட்டங்களையும், ஹைவ் 49 ஓட்டங்களையும், ராகுல் ராவிட் 16 பந்துகளை எதிர் கொண்டு 30 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் ஓடோயா 2 விக்கெட்டுக்களையும், சுஜி, ரிக்கோலா தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.





பதிலுக்கு 291 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய கென்ய அணியால் 50 ஓவர்கள் நிறைவில், 7 விக்கெட்டுக்களை இழந்து, 192 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.
அவ் அணி 75 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த போதும் ஆறாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ஓமாவும், பற்ரேலும் 92 ஓட்டங்களை இணைப்பு ஓட்டமாகப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.
இதில் ஓமா 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அகக்கரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து முதலாவது சர்வதேச அரைச் சதம் பெறும் வாய்ப்பை இழந்து வெளியேறினார்.
இவரை விட துடுப்பாட்டத்தில் டி.ஷஹ் 33 ஓட்டங்களையும், பற்ரேல் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.
உதிரிகளாக 42ஓட்டங்களை இந்திய அணி கென்ய அணிக்கு விட்டுக் கொடுத்தது.
...நு வீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும், பதான் 2 ...க்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# மினி உலகக் கோப்பையை இந்தியா மீண்டும் கைப்பற்றும் ——கும்ளே



இந்தியக் கிரிக்கெட் அணி மினி உலகக் கோப்பையை இந்த முறை கைப்பற்றும் என்று முன் னணி சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே நம்பிக்கை தெரிவித்துள்ளார். பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் இதனை அவர் கூறியுள்ளார்.
"இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிரான நாட்வெஸ்ட் கிரிக்கெட் கடைசிப் போட்டியில் சிறப்பாக ஆடியது அது நல்ல நம்பிக்கையை அளித்தது. ஆட்டத்தில் கங்குலி, டிராவிட், ஹைவ் ஆகியோர் நன்றாக ஆடினார்கள். யுவராஜ், லக்ஸ்மன், ஷேவாக் இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். திறமை வாய்ந்த இந்திய அணி சிறப்பாக ஆடிக்கோப்பையைக் கைப்பற்றும்" என்று கும்ளே கூறினார்.

# தொடக்க ஆட்டக்காரராக ஷேவாக் மீண்டும் ஆடுவார் ——கங்குலி

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரராக தொடர்ந்தும் ஷேவாக்கே களமிறங்குவார் என அவ் அணியின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார். ஷேவாக் நன்றாக அடித்து ஆடக்கூடியவர். அவர் டெஸ்ட் போட்டி போல் பந்தை தேர்ந்தெடுத்து ஆட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்.
இங்கிலாந்துக்கு எதிரான நட்வெஸ்ட் போட்டியின் கடைசி ஆட்டத்தில் ஷேவாக்கை 4ஆவது வீரராகக் களம் இறக்கப்பட்டது அவர் மீண்டும் நம்பிக்கை பெறத்தான். 4ஆவது வீரராக இறங்கும் போது முன்னணி வீரர்கள் பந்து வீசஅதிகவாய்ப்பு இல்லை. பந்து தன்மை மாறி இருக்கும். அதனைப் பயன்படுத்தி அவர் ஓட்டங்களை எடுக்கமுடியும் என்பதால் அந்த முடிவு எடுக்கப்பட்டது. எனக் கூறிய கங்குலி கென்யா அணி அபாரகரமான ஒன்றாகும். அதனை நாங்கள் எளிதாக நினைக்கவில்லை என்றார்..

# மினி உலகக்கோப்பைக் கிரிக்கெட் காயம் காரணமாக பாலாஜி திடீர் விலகல்



மினி உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் இருந்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் எல்.பாலாஜி காயம் காரணமாக விலகிக்கொண்டார். அவருக்குப் பதிலாக அமித்பண்டாரி சேர்க்கப்பட்டுள்ளார்.
அடிவயிற்றுப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து எல்.பாலாஜி இந்தப் போட்டியில் இருந்து விலகியுள்ளார். இதனை இந்திய அணித்தலைவர் கங்குலி நேற்றுத் தெரிவித்தார். இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக முன்னணித் துடுப்பாட்டவீரர் டெண்டுல்கர் ஆடாத நிலையில், 2ஆவது வீரராக எல்.பாலாஜி ஆடமுடியாமல் போனது இந்திய அணிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

# இறுதிப்போட்டியில் லியாண்டர் பயஸ் ஜோடி தோல்வி அரையிறுதிக்கு பெடரர், டிம்ஹென்மன் முன்னேறினர்



பெடரர்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸ்-டேவிட்ரிகில் ஜோடி இறுதிப்போட்டியில் தோற்றுப்போனது.
கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடந்து வருகிறது.
இதில் ஆண்கள ஒற்றையர் பிரிவு கால் இறுதி ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரெரும்(சுவிட்சர்லாந்து) 2முறை சம்பியன் பட்டம் வென்ற ஆந்த்ரே அகாசியும்(அமெரிக்கா) மோதினார்கள். மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டம் அடுத்த நாளில் தொடர்ந்து நடந்தது.
இதில் ரோஜர் பெடரெர் 6-3,2-6,7-5,3-6,6-3 என்ற செட் கணக்கில் அகாசியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.
இதேபோல் மழையால் பாதிக்கப்பட்டு அடுத்த நாளில் தொடர்ந்து நடந்த கால் இறுதி ஆட்டத்தில் 5 ஆம் நிலை வீரர் டிம்ஹென்மன் (இங்கிலாந்து)6-1,7-5,5-7,6-2 என்ற செட் கணக்கில் 22 ஆம் நிலை வீரர் டோமினிக்கை (செலோவாக்கியா) தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றார்.
மற்றொரு கால் இறுதியில் 2001 ஆம் ஆண்டு சம்பியனான லெய்டன ஹெவிட் (ஆஸ்திரேலியா) 6-2,6-2,



டிம்ஹென்மன்

6-2 என்ற நேர் செட்டில் ஜேர்மனி வீரர் டாமி ஹாஸ்சை தோற்கடித்து அரை இறுதிக்குள் நுழைந்தார்.
இன்னொரு கால் இறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஆன்டி ரோட்டிக்(அமெரிக்கா) அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். சுவீடன் வீரர் ஜோஷிம் ஜோகண்டன் 6-4,6-4,3-6,2-6,6-4, என்ற செட் கணக்கில் ரோட்டிக்கை வீழ்த்தி அரை இறுதிக்கு தகுதி தேடிக்கொண்டார்.
இறுதிப் போட்டியில் லியாண்டர்பயஸ்-டேவிட்ரிகில் ஜோடி மார்க் நோலெஸ்(பகாமஸ்)- டேனியல் நெஸ்டோர்(கனடா) ஜோடியுடன் மோதியது. இதில் லியாண்டர் பயஸ்-டேவிட்ரிகில் ஜோடி 3-6,3-6 எனற நேர் செட்டில் மார்க் நோலேஸ் டேனியல் ஜோடியிடம் தோல்வி கண்டது.
கலப்பு இரட்டையர் பிரிவில் அரை இறுதியில் லியாண்டர் பயஸ் (இந்தியா)-மார்டினா நவரத்திலோவா(அமெரிக்கா) ஜோடி 4-6,6-3,6-7(3-10) என்ற செட் கணக்கில் அவுஸ்திரேலியாவின் டுட்உட் பிரிட்ஜ் -அலிசியா மோலிக் ஜோடியிடம் தோல்வி கண்டது.

# யு.எஸ்.ஓபன் பெண்கள் ஒற்றையர் ஆட்டம் அமெரிக்காவின் ஆதிக்கம் தகர்ந்தது



தெமன்தியேவா



ஸ்வெட் லேனாவும்

யு.எஸ்.ஓபன் பெண்கள் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்க வீராங்கனைகள் லிண்ட்சே டேவன்போர்ட் மற்றும் ஜெனிபர் கெப்ரியாட்டி ஆகியோர் தோல்வி அடைந்தனர். இவர்கள் இருவரும் ரஷ்ய வீராங்கனைகளிடம் தோல்வியைத் தழுவினர்.
இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் எலீனா தெமன்தியேவாவும், ஸ்வெட் லேனாவும் மோதவுள்ளனர்.



**சிந்தனைக்கு**

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது; பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது; கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## குழப்பத்திற்கே உதவும் !

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவுவதற்கென தேசிய ஆலோசனைக்குழு ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈடுபட்டுள்ளதாகவும், இக்குழுவில / சபையில் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளடக்கப்படுவார்கள் எனவும் அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினை என்ற ரீதியில் இதற்கான தீர்வு பல தரப்பினருடனும் ஆராயப்படுதல் வேண்டும் எனக் கூறப்படுவது நிராகரிக்கப்பட முடியாததொன்றுதான். ஏனெனில், தேசிய பிரச்சினை / நெருக்கடி ஒன்றை ஒரு தரப்பினர் தமது இஷ்டப்படி தீர்த்து வைத்தல் என்பது பொருத்தப்பாடானதாகவும் சாத்தியப்பாடானதாகவும் இருக்கமாட்டாது தான்.

ஆகையினால், தேசிய பிரச்சினைக்கான தீர்வை எட்ட பல தரப்பினரும் கலந்து பேசுதல் என்பது தேவையானதே. ஆனால், சிறிலங்காவின் கடந்த கால வரலாற்றில் இனப்பிரச்சினைத் தீர்விற்கென கலந்து பேசுவதற்கென மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினால், கிட்டிய பயன் என்ன?

இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆராய்வதற்கெனக் கடந்த காலத்தில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக் குழு என்பனவற்றால் கிட்டிய பயன்தான் என்ன? இவற்றால் ஏற்பட்ட செலவு, கால விரையம் என்பனவற்றைத் தவிர இவற்றில் காணப்பட்ட முன்னேற்றம் என்ன? இனப்பிரச்சினைத் தீர்வாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் சர்வகட்சி மாநாட்டிலும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போலன்றி வேறு என்ன நிகழ்ந்தது?

அதிலும் குறிப்பாகத் தற்பொழுது ஆளும் கூட்டணியின் தேசிய ஆலோசனைக் குழுவில் மதத் தலைவர்களும், சிவில் தலைவர்களும் பங்கேற்கவுள்ளதாக அரச தரப்புத் தெரிவித்துள்ளமையானது, இக்குழு பல தரப்பினரையும், பல மட்டத்தினரையும் கொண்டதாக இருக்கும் என்பதை ஊர்ஜிதம் செய்கிறது. இந்நிலையில் சர்வகட்சி மாநாட்டிலும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள்கூட இதில் ஏற்படுமா? என்ற கேள்வியைத் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததே.

ஏற்கனவே, இனப்பிரச்சினைத் தீர்வில் ஆளும் தரப்பிற்கு இணக்கப்பாடு இருப்பதாக இல்லை. ஆளும் கூட்டணியில் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்ட மட்டத்திற்கு அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்கின்றது. ஆனால், பிரதான கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. அதிகாரப் பரவலாக்கல் என்பதையே எதிர்க்கின்றது.

இதேவேளை, பௌத்த மதத்தின் பிரதிநிதிகளெனக் கூறிக் கொண்டு பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்துள்ள ஜாதிக ஹெல உறுமய சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே மீது நம்பிக்கையில்லையெனத் தெரிவித்ததோடு, அதிகாரப் பரவலாக்கல் என்பதையும் எதிர்ப்பதாகவுள்ளது.

இந்நிலையில், சமயத் தலைவர்களையும் - குறிப்பாகப் பிக்குக்களையும் ஏனையோரையும் இணைத்துப் பெறப்படும் ஆலோசனையின் அடிப்படையில் முன்னேற்றம் காண்பதென்பதும் - அதன் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முற்படுவதென்பதும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதில் சிக்கலை வளர்க்க அரசாங்கம் முற்பட்டுள்ளதாகவே கொள்ள வேண்டியதாக இருக்கும்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றைக்காண விரும்புமேயானால், அது முதலில் முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். திடமான உறுதியான தீர்மானங்களை அது கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். சமாதானத்திற்கு ஆதரவான சக்திகளை இணைத்து வரும் எதிர்ப்புக்களை எதிர்கொண்டு வெற்றிகொள்ளத் தெரிந்திருத்தல் வேண்டும்.

ஆலோசனை என்ற பெயரில் சமாதானத்தீர்விற்கு எதிரானவர்களை அழைப்பது பிரச்சினையை மேலும் சிக்கலானதாக ஆக்க உதவுமே ஒழிய தீர்விற்கு உதவமாட்டாது. இதற்காக ஆலோசனை பெறப்படாமலோ விளக்கம் கூறாமலோ தீர்வு எட்டப்பட வேண்டும் எனக் கூறவில்லை. தீர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவித்து விளக்கம் அளித்துஒத்துழைப்புப் பெறப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் தலைமைத்துவமென்பது அர்த்தமில்லாததாகிவிடும். அதாவது, தலைமைத்துவம் என்பது குழப்பங்களை முறியடித்துத் தலைமை தாங்கிச் செல்வதே ஒழிய குழப்பங்களை உருவாக்க வழி வகுத்துத் தாமும் குழப்பத்திற்கு உள்ளவதல்ல. ஆனால் ஆட்சியாளர்களின் இலக்கே சமாதானத்தைக் குழப்புவதாக இருப்பின் இதற்கு இது பொருத்தமான வழிமுறையே.

# அடிப்படைத் தேவைகளின்றி அவலமுறும் வவுனியா அரசினர் மருத்துவமனை

வவுனியா மாவட்டத்தின் பொது மருத்துவமனை பல்வேறு வகையான அடிப்படைத் தேவை கள் இன்றி இயங்குவதாகவும் இதன் காரணமாக பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் பொதுமருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார். மாவட்ட பொது மருத்துவமனை என்று கூறினால் அதற்கு என்று சில அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அப்போது தான் அந்த வைத்தியசாலை சரியாகச் செயற்பட முடியும் . ஆனால் வவுனியா பொது மருத்துவமனையினைப் பொறுத்தமட்டில் பணி புரிபவர்களை விட வெற்றிடங்களே அதிகமாக இருக்கின்றது என்று தெரிவித்தார். வவுனியா பொது மருத்துவமனையில் மொத்தமாக 616 பேர் பணியாற்ற வேண்டும். ஆனால் தற்போது 269 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். 347 பேருக்கு வெற்றிடம் இருக்கின்றது இத்தனை ஆளணிப் பற்றாக்குறையை வைத்துக்கொண்டு வைத்தியசாலையினை எவ்வாறு சரியாக இயக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்

வவுனியா பொதுமருத்துவமனையில் 75 வைத்திய அதிகாரிகள பணியாற்ற வேண்டும். ஆனால் 37 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர் இதன் காரணத்தால் 41 பேருக்கு வெற்றிடம் இருக்கின்றது. இதே போன்று தாதிமாருக்கு பாரியவெற்றிடம் இருக்கின்றது 140 பேர் பணியாற்ற வேண்டிய நிலையில் 64 பேர் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். தற்போது 76 பேருக்கு வெற்றிடம் இருக்கின்றது இதன் காரணத்தால் தாதிமார் சில சமயம் இரண்டு நாட்களுக்கு கூட தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பரிசாரகர்கள் 93 பேர் பணியில் இருக்க வேண்டும் ஆனால் 15 பேர் மட்டுமே பணியில் உள்ளனர் இதே போன்று பொதுத் தொழிலாளர் 68 பேர் பணியாற்ற வேண்டும் ஆனால் 25 பேர் மட்டுமே உள்ளனர்.இதனை விடவும் ஏனைய பதவிகளுக்கும் வெற்றிங்கள் உள்ளன. ஆளணிப்பற்றாக்குறைக்கு அப்பால்

தற்போது வவுனியாவில் வரட்சி நிலவுகிறது இதன் காரணத்தால் வவுனியா பொது மருத்துவமனையில் பாரிய அளவு நீர் பற்றாக்குறை உள்ளது நாள் ஒன்றுக்கு எட்டு தண்ணீர் தாங்கி நீர் தேவை. ஆனால் தற்போது இராணுவம் பொலிஸ் விமானப்படை ஆகியோர் இணைந்து நாள் ஒன்றுக்கு 4 தண்ணீர் தாங்கியில் நீர் தருக்கின்றனர். வைத்தியசாலை வளாகத்தில் இருக்கும் 5 கிணறுகளில் 4 கிணறுகள் முற்றாக வற்றியுள்ளன. நாள் ஒன்றுக்கு பொது மருத்துவமனையில் 400 உள்நோயாளர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெறுகிறார்கள் வெளிநோயாளார் பிரிவில் 700இற்கும் அதிகமானோர் சிகிச்சை பெறும் அதேசமயம் 120 இக்கும் அதிகமான மாதாந்த கிளினிக்கு வருபவர்களும் நாளாந்தம் சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள்

ஒரு பொது மருத்துவமனையில் இருக்க வேண்டிய முக்கியமான பிரிவுகளில் கண் வைத்திய பிரிவு மிகமுக்கியமானது ஆனால் அது இங்கு இல்லை கண்வைத்தியம் செய்வதற்கு என்று உள்ள பெரும்பாலான உபகரணங்கள் நன்கொடைகள் மூலம் கிடைக்கப்பட்டதாகும் கண்வைத்தியத்திற்கு நாம் தற்போது சில ஏற்பாடுகளை செய்து வருகின்றோம் இதற்கென்று வவுனியா சாயி சமித்தி ஒன்றரை லட்சம் செலவில் ஏற்கனவே இருக்கும் கட்டடத்தினை புனரமைப்புச் செய்து தருவதாக ஒப்பு கொண்டுள்ளது இது மட்டும் அன்றி மருந்துகளுக்கு தட்டுபாடு நிலவுகிறது சில முக்கியமான மருந்துகள் முற்றாகவே முடியும் சந்தர்ப்பமும் உள்ளது உதாரணமாக ஏ,ஆ,வி, அண்மையில் முற்றாக முடிந்து உள்ளது சில சமயங்களில் மிகவும் கஷ்டப்பட்ட நோயாளர்கள் வருவார்கள் மருந்து இல்லாமல் இருக்கும். அதற்காக நாங்கள் சிகிச்சை வழங்க முடியாது என்று கூறமுடியாது. வெளியில் எமது நலன்புரிச் சங்கம் மற்றும் சைக்கின் பாதுகாப்பு நிலையம் என்பவற்றில் கிடைக்கும் நிதியில் கூட மருந்துகளை பெற்று கொடுத்த சந்தர்ப்பங்களும் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

-மகா

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சமாதான நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது

**-ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் சுபீட்சமும் சமாதான முன்னேற்ற நடவடிக்கையிலேயே தங்கியுள்ளதென ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை சீர்திருத்தத்திட்ட அடிப்படையில் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய வதிவிடப் பணிப்பாளர் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**-13ஆவது திருத்தத்தின் கீழ்**

# மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக்கொள்ள முதலமைச்சர்கள் தீர்மானம்

அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்குக் கிடைக்க வேண்டிய பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து மாகாணங்களினதும் முதலமைச்சர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர். மாகாண சபைகளுக்கு கிடைக்கும் குறைந்தளவிலான நன்மைகளை மேலும் தவிர்த்துக்கொள்ள முடியாதுள்ளதாக மேல் மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்கூரே தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர்களின் 12ஆவது மாநாடு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று சிலாபத்தில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்: மாகாணசபைகளுக்குச் சொந்தாமான விடயங்கள் தொடர்பாக மத்திய அரசாங்கத்தின் அனுசரணைகளினால் வரும் நெருக்கடிகளைத் தடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அனேகமான சந்தர்ப்பங்களில் விடயங்கள் திருத்தப்பட்டிருந்தாலும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள் அவர்களது அதிகாரத்தினை உபயோகித்து மாகாண சபைகளுக்குரிய விடயங்களிலும் தலையிடுகின்ற சந்தர்ப்பங்களை தாம் கண்டுள்ளதாகவும், இவை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் இதனடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தி அவற்றை வழங்குவது தமது பொறுப்பாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

# வரிமன்னிப்புப் பிரேரணை! வரும் 22 ஆம் திகதி விவாதம்

வரி மன்னிப்புப் பிரேரணையை பாராளுமன்றத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி விவாதத்திற்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசாங்கம் அறிமுகப்படுத்திய இந்த சட்ட மூலத்தின் மூலம் பெருமளவு வரியை அரசாங்கம் இழந்து விட்டதாகத் தற்போதைய அரசாங்கம் தெரிவித்துள்ளது. எனவே அதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகிறது. இந்த நிலையில் இதில் சில உள்ளடக்கங்கள் சேர்க்கப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி குறிப்பிட்ட பிரேரணை பாராளுமன்ற விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (32)

# கொழும்பு குண்டு வெடிப்பு சந்தேகநபர் விடுதலை

கொழும்பு கலதாரி விருந்தகத்தின் முன்னால் பார ஊர்தி ஒன்றின் மூலம் குண்டுத் தாக்குதலை நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஒருவரை கடந்த வியாழக்கிழமை கொழும்பு நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.இந்த குற்றச்சாட்டுக்கு உரிய சாட்சிகள் இல்லை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டே கந்தசாமி பற்குணராஜா என்ற இளைஞர் விடுதலை செய்யப்பட்டார். 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி பாரஊர்தியில் கொண்டு வரப்பட்ட குண்டு ஒன்றை வெடிக்கவைத்தன மூலம் 13 பேரின் உயிரிழப்புக்கு இவர் காரணமாக இருந்தார் என்றே பொலிசார் குற்றம் சுமத்தியிருந்தனர். (32)

# விடுதலைப் புலிகள் முன்வைக்கும் யோசனைகளில் ஏற்றுக்கொள்ளப்படாதவை குறித்து அறிவிப்போம்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய பின்னர் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படும் யோசனைகளில் ஏற்றுக் கொள்ளக் கூடியதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். ஏற்றுக்கொள்ளாத விடயங்கள் குறித்து அறிவிக்கப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார். கொழும்பு தனியார் வானொலிக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். சனாதிபதி தலைமையிலான விசேட குழு சமாதான செயற்பாடுகளின் போது அரசாங்கத் தரப்பால் முன்வைக்கப்படும் யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் அமரும்போது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்படும் யோசனைகளில் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயங்கள் குறித்தும் அரசாங்கம் அறிவிக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் கூறினார்.

## ஹொலிவூட் புத்தா திரைப்படத்திற்கெதிராக அமெ.தூதரகம்முன் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஜாதிக பிக்குமார் அமைப்பினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அமெரிக்காவில் இன்னும் இரண்டு தினங்களில் வெளியிடப்படவுள்ள ஹொலிவூட் புத்தா என்ற திரைப்படம் பௌத்த தர்மத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (32)

## பாரிய கொள்ளைகளில் ஈடுபட்ட தப்பியோடிய இராணுவத்தினர் மூவர் கைது

கொழும்பு மொரட்டுவவிலும், ஏனைய பகுதிகளிலும் பாரிய கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த, படையில் இருந்து தப்பி வந்த மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இவர்களுடன் சேர்த்து 9 பேரைக்கொண்ட குழவினரும் மொரட்டுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 11 வாகனங்கள் உட்பட 25 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன இதேவேளை கொழும்பு கம்பஹா மற்றும் களுத்துறைப் பகுதிகளை உள்ளடக்கிய மேல் மாகாணத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிவந்தவர்களை படையில் இருந்து நிரந்தமாக் விலக்கி விட மீண்டும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதியில் இருந்து 16 ஆம் திகதிவரை கொழும்பில் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.(32)

## வீதி விபத்தில் நால்வர் பலி

கண்டியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் நான்கு பேர் உயிரிழந்தனர். இவர்களில் இருவர் ஒன்றரை வயது, மற்றும் இரண்டரை வயதுக் குழந்தைகள் ஆவர்.வீதியில் அமைந்துள்ள மஞ்சள் கடவையில் பயணிகளை செல்லவிடும் நோக்கில் தனியார் சிற்றூர்தி ஒன்று நிறுத்தப்பட்டிருந்த வேளை அதன் பின்னால் முச்சக்கர வண்டி ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் பின்னால் வந்த மற்றும் ஒரு தனியார் சிற்றூர்தி முச்சக்கர வண்டியை மோதியுள்ளது. இதன் போது முச்சக்கர வண்டியில் இருந்த தாய் ஒருவரும், அவரின் இரண்டு பிள்ளைகளும், முச்சக்கர வண்டியின் சாரதியும் உயிரிழந்தனர். சம்பவத்திற்குக் காரணமான சிற்றூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் (32)

## 15 இலட்சம் ரூபா பெறுமதியான- தங்க நகைகளைக் கடத்த முயன்றவர் வானூர்தி நிலையத்தில் கைது

சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை லண்டனுக்குக் கொண்டு செல்ல முயன்ற பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இந்தத் தங்க நகைகளை சூட்சுமமான முறையில் மறைத்து வைத்துக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

## இந்தியக்கடற்படைத் தளபதி வருகை

இந்தியக் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் அருண் பிரகாஸ் இன்று இலங்கைக்கு வருகிறார். இவர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார். இதன் போது சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமமந்திரி மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை ஒத்துழைப்புக் குறித்து இதன் போது கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன. இவர் திருமலைத்துறை முகத்திற்கும் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (32)

## பொலிஸ் அதிகாரிக்கு பிடிவிறாந்து

மொனராகல பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் மீது பதுளை நீதமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது. கடந்த வாரம் குறிப்பிட்ட அதிகாரி தாம் செலுத்திச் சென்ற வாக ஒன்றின் மூலம் பொதுமகன் ஒருவரை மோதியமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். எனினும் விசாரணையின் போது குறிப்பிட்ட அதிகாரி சமுகமளிக்காமல் அவரின் சார்பில் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தரே சமுகமளித்தார். இந்த நிலையில் பொய் கூறிய குற்றச்சாட்டின் பேரிலேயே குறிப்பிட்ட அதிகாரியின் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. (32)

### வீர....

இராசலெட்சுமி, பெரிய புல்லுமலை, கோப்பாய்வெளி, செங்கலடி, மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இம்மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### கொப்பாஞ்சேனை....

தப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இது தொடர்பான தகவல் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள ஊடக இதழில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கொழும்புத் துறைமுகத்திற்குள் நேற்று காரணமின்றிப் பிரவேசிக்க முற்பட்டதாகக் கூறப்படும் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதவான முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். (32)

### உதவி...

உட்பட உயர் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த உதவிகுறித்து ஜப்பான் அறிவித்தமை தெரிந்ததே. (32)

### தியாகி...

கலை இலக்கியப் போட்டிகள் போன்றவற்றையும் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழீழ விடுதலைக்காகத் தன் உயிரை ஈந்த தியாகி திலீபனின் நினைவு தினத்தை பொது நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பவற்றில் பந்தல் அமைத்து சிவப்பு, மஞ்சள் கொடி கள் கட்டி உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்குமாறு யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம் தெரிவித்தார். (36)

### தென்பகுதி...

நிலைப்பாடுகளை கேட்டறியவும் உள்ளனர். இவர்கள் பின் யாழ். குடாநாட்டிற்குச் சென்று அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்து பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் சந்திப்பர் என தெரியவருகிறது. இவர்களின் இப் பயணத்திற்கு தேசிய சமாதானப் பேரவையே ஒழுங்கமைப்பு செய்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச.21)

### சக்கரத்தில்....

செல்வதற்காக ஐந்து சிறுவர்கள் உட்பட ஏழுபேரை ஏற்றியவாறு பயணித்துக்கொண்டிருந்த காரின் பின்சக்கரம் காற்றுப்போனதால் வீதியை விட்டுவிலகி அருகிலிருந்த பசுமை வேளாண்சேவை கட்டடத்துடன் மோதியது. இதனால் கட்டடமும் சேதத்திற்குள்ளான அதேவேளை காரும் பலத்த சேதத்திற்குள்ளானது. அத்தோடு இதில் பயணித்த நடராசா புவனேஸ்வரி (வயது 67) என்பவரும், சிங்கநாயகம் சாந்தினி(வயது 06) என்ற சிறுமியும் காயத்திற்குள்ளாகி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கார்மிகவேகமாகப் பயணித்ததனாலேயே சக்கரம் காற்றுப் போனவுடன் ஓட்டுனரால் கட்டுப்படுத்த முடியாது போயிருக்கலாமென கருதப்படுகிறது. இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்காகவே வீதியில் குறிக்கப்பட்டிருக்கும் வேக எல்லைகளைச் சாரதிகள் சரியாகக்கடைப்பிடிக்க வேண்டுமென தமிழீழ காவல்துறையினர் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

### இலங்கை....

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் கருத்து வெளியிட்ட "காணாமல் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பின்" தலைவரான அவர் மேலும் உரையாற்றுகையில் "தமது அமைப்பு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களுடன் தொடர்பு பட்டிருப்பதால் எதிர்வரும் காலங்களில் யாழ்குடாநாட்டினில் மீண்டுமொரு முறை படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போவதைத்தடுத்து நிறுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

# சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

## -இன்றும் வழங்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்து நேற்று அனைத்துப் பகுதிகளிலும் வழங்கப்பெற்றது.



கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் அதற்கென அமைக்கப்பெற்ற நிலையங்களில் வைத்து நேற்று மேற்படி தடுப்பு மருந்து வழங்கப்பெற்றது.

இன்றும் சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு மருந்துக்கள் அந்தந்த நிலையங்களில் வைத்து வழங்கப்பெறவுள்ளதெனவும், நேற்றுத் தடுப்பு மருந்தினைப் பெறத்தவறிய 16 முதல் 21 வயதிற்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இன்று தங்களது வதிவிடங்களுக்கருகாமையிள்ள நிலையங்களுக்குத் தவறாது சமுகமளித்துத் தடுப்பு மருந்தினைப் பெற்றுக்கொள்ளும் வண்ணமும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.கு)

## தேசிய கராத்தே போட்டி குறித்து திருமலையில் கலந்துரையாடல்

இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் 2004 தமிழீழ தேசிய கராத்தேச் சுற்றுப்போட்டி தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த கராத்தே வீரர்கள் மற்றும் கராத்தே ஆசிரியர்கள் ஆகியோரைத் திருமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன இன்று காலை 11.00 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இதே வேளை மேஜர் ஈழப்பிரியன் நினைவாக மூன்றாவது தமிழீழ தேசிய கராத்தேப்போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் செப்ரெம்பர் 14 ஆம் திகதி திருமலை அரசியல்துறைப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது. இச்சுற்றுப்போட்டி தொடர்பான தேசிய ரீதியிலான கலந்துரையாடலும், பயிற்சிப் பாசறையும் செப்ரெம்பர் 18,19 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் காலை 10.00 மணிக்கு இலங்கையின் கராத்தேக் கலையின் தந்தையான ஷிகான்பொனிறொபர்ட் மாஸ்டரினால் நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சிப்பாசறை செப்ரெம்பர் 18 இல் மாவட்ட கராத்தேச் சங்க நிர்வாகத்தினருக்கும், 19 ஆம் திகதி கறுப்புப்பட்டி, மண்நிறப்பட்டி வீரர்களுக்கும் நடத்தப்படவுள்ளது என்று தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் தெரிவித்துள்ளார். (25)

## மண்ணெண்ணெய்க்குப் பதிலாகப் பெற்றோலை விளக்கிற்கு ஊற்றியவர் தீயினால் படுகாயம்

மண்ணெண்ணெய்க்குப் பதிலாக பெற்றோலை விளக்கிற்குள் ஊற்ற முற்பட்ட வேளை பெண்மணியொருவர் தீவிபத்திற்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா சேமமடுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மாலிகை, சேமமடு ,வவுனியா எனும் முகவரியைச் சேர்ந்த நடராசா யோகேஸ்வரி (வயது 32) எனும் பெண்மணி நேற்று முன்தினம் மாலை விளக்கிற்குள் மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை ஊற்ற முற்பட்ட வேளை தீப்பற்றியதால் பெற்றோல் போத்தல் வெடித்து கடும் காயங்களுக்குள்ளானார். இவரை உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல ஓமந்தை இராணுவச் சாவடியினூடாகக் கொண்டு சென்ற வேளை இராணுவத்தினர் உள்ளே செல்ல அனுமதிக்காததால் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். சேமமடுப்பகுதி இராணுவத்தினரதும் விடுதலைப்புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பகுதியையடுத்த சூனியப் பிரதேசத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ச)

அத்துடன் தற்போது மனித உரிமை என்பது வசதி படைத்தவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் மட்டுமே கிட்டுவதாக உள்ளது. ஆனால் நாம் எல்லாவகையிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மனித உரிமைகள் கிட்டவேண்டுமெனப் போராடுவோம். இவ்வாறு அனைத்து மனித உரிமை மீறல்களையும், தட்டிக்கேட்பதன் மூலம் தான் எதிர்வரும் நாட்களில் காணாமல் போதல்களையும் தடுத்து நிறுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (27,36)

### வசதிகளை....

கட்சியாக காட்சிதருகிறது. சுதந்திரக்கட்சி தவறிழைக்கும் போது, அக்கட்சியை நேர்வழியில் நடாத்தவே தாங்கள் கூட்டணி அமைப்பதாக மக்களை ஏமாற்றிய ஜே.வி.பி.கட்சி, சுதந்திரக்கட்சியுடன் இணைந்த பின்னர், மக்களை ஏமாற்றி, அரசாங்க வசதிகள், வாய்ப்புக்கள், புகழ், பெருமை என்று அலைவதாகவும், மக்களே இதற்கு ஒரு நல்ல பதிலை வழங்குவார்கள் என்றும் கருத்துக் கூறியுள்ளார்.

### புல்லுமலை....

கூறும் போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். விசாரணைகள் முடிவடைந்த நிலையிலேயே அது தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.